1260 / 1260

egistered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 10—No. 12.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 DEC 1937

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாநம் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் ௧௦	ஈசுவர ஆண்டு மார்கழித் திங்கள் 1937ஆம் டிசம்பர்மீ	இதழ் ௧௨

உள்ளுறை		பக்கம்
கேளூர்ந்த திரிபுராந்தகன்	... ...	௫௭௭
சைவத்தேர்வு வினாக்கள்—1937	... ...	௫௮௪
இளஞ்சைவப் புலவர் தேர்வு—1937	...	௫௯௦
தத்துவக் கட்டளை ...	... ...	௫௯௫
ஞானாமிர்த மூலமும் விளக்கவுரையும்	...	௫௯௭
திருத்தவத்துறை	... ...	௬௦௭
சிலப்பதிகாரமும் சமயங்களும்	... ...	௬௧௫
பெருந்தகைதன் பேருரு	... ...	௬௨௧

பத்திராசிரியர் : அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.

சைவ சித்தாந்த மகாசமாஜம்
திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1937 தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

சமாஜ அறிக்கைகள்

1. இவ்வாண்டில் 21-11-1937ல் நடைபெற்ற சமாஜத்திய சைவத் தேர்வுகட்குப் பதின்மூவர் விண்ணப்பித்தனர். இவர்களுள் சைவப் புலவர் பட்டத்துக்கு விண்ணப்பித்த நால்வரும் பரீக்ஷைக்கு வந்து விடை யெழுதினர். இவர்களுள் இருவர் மூன்றும் வகுப்பில் தேறினர். இவ்விருவரில் திரு. சொ. அ. மணிவாசகம் முதல் தானமும், திரு.வ. சி. வைத்தியலிங்கம் இரண்டாம் தானமும் பெற்றனர். இளஞ் சைவப் புலவர் பட்டத்துக்கு விண்ணப்பித்த ஒன்பதின்மருள் ஐவரே பரீக்ஷைக்கு வந்து விடையெழுதினர். இவர்களுள் இருவர் மூன்றும் வகுப்பில் தேறினர். இவ்விருவரில் திரு. ச. பஞ்சாக்ஷர சர்மா முதல் தானமும், திரு. இ. குமாரசுவாமி இரண்டாம் தானமும் பெற்றனர். இந்நால்வர்க்கும் பட்டங்களும் தேர்வு வெற்றிப் பத்திரங்களும் சமாஜ ஆண்டு விழாவில் வேலூரில் 31.12-1937 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படும். இத்தேர்வுகளில் சைவப் புலவர் தேர்வுக்குரிய வினாத்தாள்களை யமைத்து, விடைத் தாள்களைத் திருத்தி மதிப்பிட்டு முடிவுகூறி யுபகரித்த சைவப் பெரியார் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கட்கும், இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு அவ்வாறே தொண்டு புரிந்த சைவப் பெரியார் திரு. மா. துரைசாமி முதலியார் அவர்கட்கும், இத்தேர்வுகளைச் சமாஜத்தின் சார்பாகச் சிதம்பரம், தஞ்சாவூர், திருப்பாண்டிக்கொடுமுடி, கொழும்பு, பருத்தித்துறை யாழ்ப்பாணம் ஆகிய ஐந்திடங்களில் நடத்திக் கொடுத்த திருவாளர்கள் - அ. சிதம்பரநாத செட்டியார், த. வே. உமாமகேசுவரம் பிள்ளை. பெ. கோவிந்த மூப்பனார், பி. கணபதி பிள்ளை, எஸ். முருகேசு ஆகிய அன்பர்கட்கும், சென்னையிலும் கோயன்புத்தூரிலும் மாணவர்கள் வாராமையால் நடத்தாவிடினும் அவர்கள் வருகையை எதிர்நோக்கித் தேர்வுகளை நடத்த ஒப்புக் கொண்ட திருவாளர்கள் - நே. த. கிருஷ்ணசாமி முதலியார், துடிசைக்கிழார் சிதம்பரனார் ஆகிய அன்பர்கட்கும், தேர்வு நிலையங்களாக உபயோகிக்க விடை தந்த கரந்தைத் தமிழ்ச் சங்கம் கோவைத் தமிழ்ச் சங்கம், இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை, கொழும்பு விவேகாநந்தர் சங்கம் ஆகிய அறநிலையங்களின் பாதுகாப்பாளர்கட்கும் நமது சமாஜம் மனமார்ந்த நன்றி செலுத்துகின்றது. இத்தேர்வுகளிற் சைவ இளைஞர்கள் நூற்றுக் கணக்கில் வந்து கலந்து கொள்ளாதது ஒரு பெருங் குறையாகும். மேடை மீதேறிப் பேசப் பிரியப்படும் இளைஞர்கள் இல்லத்தில் அமைதியா யிருந்து சைவ இலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையும் பயின்று தேர்வுக்கு வந்து வெற்றி பெறுதற்கு முயற்சி செய்ய விரும்பாதது மிகப்பெரிதும் வருந்தத்தக்கது. தேர்வு விதிகளின்படி ஐவர் தேறினாலன்றிப் பரிசு அளிக்கப்பட மாட்டாது. பரிசளித்தற்குரிய பொருளை நன்கொடையாகத் தர பல நண்பர்கள் காத்துக் கொண்டிருந்தும் மாணவர்கள் மிகுதியாக வாராமையால் பரிசும் இல்லாமற் போகிற நிலை வந்துள்ளது. இவ்வாண்டில் நடைபெறும் சைவ இளைஞர் மகா

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் மாதத்தமிழ்ப் பத்திரிகை

மலர் பத்து

1937

பத்திராசிரியர்

அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.

உதவிப்பத்திராசிரியர்

மா. துரைசாமி முதலியார்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

திருவருளகம், 22 - ஏ, கல்லுக்காரத் தெரு

மயிலாப்பூர், சென்னை

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை.

உ ள் ளு றை

பக்கம்

அணிமுருகாற்றுப்படை ... எரு
அண்ணமலையில் அட்டுழியம்—காரியதரிசி ... ருசுஅ
அப்பரும் யாக்கையும்—கா. பொ. இரத்தினம் ... ருருச
அப்பர் படக்காட்சி—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... கககூ
அருணகிரிநாதர்—மு. ராகவையங்கார் ... சOஎ
அருள்முருகாற்றுப்படை ... எக
அழகனுய பித்தன்—இளஞ்சைவப்புலவர் மணிவாசகம் ... ௩கஅ
அன்புநெறியே சைவசமயம்—பத்திராசிரியர் ... சுஎ
ஆன்ம சுயராச்சியம்—ந. சிவகுருநாத பிள்ளை ... கருஅ
இச்சமயத்திற்குவேண்டிய சமயம்—ச. சச்சிதாநந்தம் பிள்ளை கOஅ, கரு உ, உகரு
இராமகிருஷ்ண பரமஹம்ஸர்—பத்திராசிரியர் ... கஉகூ
இரிஷியூர் திருக்கோயில்கள் நிலைமை—P. தியாகராஜ பிள்ளை ... ௩எO
இருதயம் மூளையா?—உதவிப்பத்திராசிரியர் ... உருஅ
இளைஞர் மகா நாட்டுத் தலைமையுரை—பூ. ஆலால சுந்தரம் செட்டியார் ... ௩சு
இன்பச்சைவம்—சொ. அ. மணிவாசகம் ... உகச
உருவ வழிபாட்டின் உள் பொருள்—S. A. அமிர்த கடேசுவரன் பிள்ளை ... ருசக
உள்ளங்கவர்கள்வன்—ந. சிவகுருநாத பிள்ளை ; ஜி. கலியாணம் ... உ௩சு
உற்றார் யார்—பத்திராசிரியர் ... உருச
எச்சம்—திடிசைக்கிழார் சிதம்பரனார் ... உகO
,, T. A. நெல்லையப்ப பிள்ளை ... ருசரு
எண்வகை மலர்கள்—நா. சிவபாதசுந்தரம் ... ௩கக
ஏர் என்னும் வைப்புத்தலம்...T. V. சதாசிவ பண்டாரத்தார் ... ௩உஉ
காவகுப்பு ... அஉ
கல்லிற்செம்பிற் கடவுளிருக்கை—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... ௩சுசு
களவகுப்பு ... அஉ
கிறிஸ்தவமும் ஜப்பானும்—உதவிப்பத்திராசிரியர் ... கஉஎ
குறிப்பும் விரிவும்—மயிலைக்கிழார் இளமுருகனர் ... உஉக
சத்தி வகுப்பு ... அO
சமயக்குறிப்புகள்—மயிலைக்கிழார் இளமுருகனர் ... கககூ

பக்கம்
சமாஜ ஆண்டு விழா—ஜி. கலியாணம் ... ருஅ
சமாஜ உத்தியோகஸ்தர்கள் ... ருக
சமாஜ முப்பத்தோராம் ஆண்டுவிழாச் சொற்பொழிவுக் குறிப்புகள்—உதவிப்பத்திராசிரியர் ... கள
சமாஜம் நிறைவேற்றிய தீர்மானங்கள் ... ரு௩
சமாஜ விசேஷ மகாநாடு—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... ௩அ0
சம்பந்தர் தேவாரமும் சர்வ கலாசாலை உரையும்—ஈ. ந. தணிகாசல முதலியார் ... ருசுக
சன்மார்க்கம்—ஔவை - துரைசாமிப் பிள்ளை ... ௩0க
சிலப்பதிகாரமும் சமயங்களும்—ஜி. கலியாணம் ... சுகரு
சிவஞான சுவாமிகள்—ஞானியார் சுவாமிகள்; நே. த. கிருஷ்ணசாமி முதலியார் ... உகூச
சிவஞானயோகிகள் திருநாள்—ந. சிவகுருநாத பிள்ளை ... ககூ௩
சிவாலய தத்துவம்—சச்சிதாநந்த சுவாமிகள் ... ௩௩எ
சுந்தரர் நாடகம்—அ. மு. பரமசிவாநந்தம் சகஎ, சசுரு, ருக௩
செந்திலிற் கண்டதும் கேட்டதும்—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... க௩௩
செய்தித் திரட்டு—மயிலைக்கிழார் இளமுருகனார் ... கூ௩
சைவசமயம்—ஔவை துரைசாமிப் பிள்ளை ... உ0ரு
சைவ சித்தாந்த மகா சமாஜ முப்பத்தோராம் ஆண்டு அறிக்கை ... உ0
சைவ சித்தாந்த மகா சமாஜம் நடத்துகிற சைவத் தேர்வுகள் ... உசு
சைவ சேனை—ப. வீரசிங்கம் ... சருச
சைவத் தேர்வு வினாக்கள் ... ருஅச
சைவபேதம்—ச. பொன்னுசாமி குருக்கள் ... கரு
சொரூப வகுப்பு ... அச
ஞானமிர்த மூலமும் விளக்கவுரையும்—ஔவை துரைசாமிப் பிள்ளை உசுஅ, ௩௩க, ருசஅ, ருகஎ
தத்துவக்கட்டளை ... ருக௩
தமிழும் ஹிந்தியும்—S. சோமசுந்தர பாரதியார் ... சகஎ
தலைமைப் பேருரை—ந. சிவகுருநாத பிள்ளை ... க
திருக்கயிலாய யாத்திரை—விபுலாநந்தர்; ஜி. கலியாணம் ருசு௩
திருக்கழுக்குன்றம் மலைமருந்துப் பத்து—கீ. இராமலிங்க முதலியார் ... சசுஉ
திருக்குறள் ஓர் இலக்கியமா?—நே. த. கிருஷ்ணசாமி முதலியார் ... உஉஉ

பக்கம்
திருத்தவத்துறை—மு. ராகவையங்கார் ... ௬௦௭
திருநந்திதேவர்—ஞானியார் சுவாமிகள் ; நே. த. கிருஷ்ணசாமி முதலியார் ... ௨௪௧
திருவருட் பிரபாவத்தை விளக்கும் புதிய அற்புதச் சரிதைகள்—உதவிப்பத்திராசிரியர் ... ௧௩௬
திருவாரூரர்—P. தியாகராஜ பிள்ளை ௩௨௮, ௪௩௭
திருவெழுகூற்றிருக்கை ... ௭௯
தும்மல்—மயிலைக்கிழார் இளமுருகனார் ... ௩௯௪
தூத்துக்குடியில் ஆண்டு விழா—ந. சிவகுருநாத பிள்ளை ... ௬௩
தெருர்ந்த திரிபுராந்தகன்—ஞானியார் சுவாமிகள் ; நே. த. கிருஷ்ணசாமி முதலியார் ... ௫௭௭
தேவாரத்திலுள்ள அகத்துறைப் பாடல்கள்—ஔவை துரைசாமிப் பிள்ளை ... ௧௬௫
தேன்கூடு—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ௪௧௬, ௪௪௭, ௫௨௮
பெங்களூரில் சமாஜ மகாநாடு—அ. மு. பரமசிவாநந்தம்... ௫௦௬
பெங்களூர் மகாநாட்டுத் தலைமையுரை—கீ. தெய்வ சிகாமணி முதலியார் ... ௪அ௧
பெங்களூர் மகாநாட்டு நல்வரவேற்பு ... ௫௧௧
பெருந்தகைதன்பேருரு ... ௬௨௧
பொருள் முருகாற்றுப்படை ... ௭௩
மகோத்ஸவம்—ஞானியார் சுவாமிகள் ; நே. த. கிருஷ்ணசாமி முதலியார் ... ௫௨௯
மட்குடமும் பொற்குடமும்—K. கோவிந்தன் ... ௫௩௯
மதிப்புரை—உதவிப்பத்திராசிரியர் ... ௩௩௬
மாணவன் மனநிகழ்ச்சி—ஜி. கலியாணம் ... ௪௪௯
மாறும் உலகில் மதத்திற்கிடம்—ச. சச்சிதாநந்தம் பிள்ளை ௫௭௩
முருகவேட்கு முடிசூட்டு விழா—உதவிப்பத்திராசிரியர்... ௨அ௯
மெய்கண்டார்—ஞானியார் சுவாமிகள் ; கச்சிமுனிசாமி உடையார் ... ௧௧௩
வரவேற்புக் கவிகள் ௫௪, ௫௫, ௫௭
வரவேற்புரை—ம. சாமிநாத முதலியார் ... ௩௦
வருமுருகாற்றுப்படை ... ௭௭
விடையூரும் விமலன்—ஞானியார் சுவாமிகள் ; கச்சி முனிசாமி உடையார் ... ௩அ௫
விரல் வித்தை—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... ௪௩௩
வெளிவராத இருதிருப்புகழ்ப் பாக்கள் ... ௯௧
வேண்டுகோள்—பத்திராசிரியர் ... ௬௫
ஹிராஸ்பாதிரியார் சொற்பொழிவுகள்—மயிலைக்கிழார் இளமுருகனார் ... ௫௩௧

Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் ௧௦	ஈசுவர ஆண்டு மார்கழித் திங்கள் 1937ஆம் டிசம்பர்மீ	இதழ் ௧௨

தேரூர்ந்த திரிபுராந்தகன்*

இவ்வுலகத்தைக் காணும்போது நமக்குக் கடவுளைப் பற்றிய எண்ணம் உண்டாகிறது. இவ்வுலகத்தை மாயை என்ற ஓர் இருள் மறைத்துக்கொண் டிருக்கிறது. அவ்விருள் ஒருவாறு நீங்கும் காலம் சம்ஹார காலம் என்றுசொல்லலாம். ஆண்டவன் மகா சம்ஹாரத்தை நம்பொருட்டே செய்கிறான். சிருஷ்டி, திதியைக் காட்டிலும் சம்ஹாரமே மேலானது. சம்ஹாரத் தொழில் கொலைத்தொழில் அன்று. அஃது அப்பதத்தின் பொருளைக் கூர்ந்து நோக்கின் விளங்கும். சம்ஹாரம் என்பது வடமொழிப் பதம். அதைச் சம், ஹாரம் என்று இரு சொற்களாகப் பிரிக்கலாம். சம் என்பது செவ்வையாக என்று பொருள்படும். ஹாரம் என்பது இழுத்தலாகும்.

*(இது, ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமயிலை வெள்ளீச் சரத்தில் 29.4-37ல் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு; திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களால் எழுதப்பெற்றது.)

ஆண்டவன் இவ்வுலகில் அல்லற்படும் உயிர்களைச் சற்று இளைப்பாற்றும் பொருட்டுத் தன்னகத்தே இழுத்து ஒடுக்கி வைத்துக்கொள்கிறான். இதுவே சம்ஹாரமாகும். 'அழிப்பு இளைப்பு ஆற்றல்' என்பர் அருணந்திசிவனார். இவ்வாறு உயிர்களின் இளைப்பை நீக்கும் ஒரு தொழிலை எவரே கொலைத் தொழில் என்பார்? கடவுள் நமது யஜமானன். அன்பு வடிவாக உள்ளவனே யஜமானன். சம்ஹாரத் தொழிலைச் செய்வதாலேயே ஆண்டவன் 'ஹரன்' என்று அழைக்கப்பட்டான். இரக்கமே ஆண்டவன் உரு என்பதைக் குறிக்க வேண்டியே திருநாவுக்கரசு சுவாமிகளும் திருமறைக்காட்டுத் தேவாரத்தில் "இரக்கமொன்றிலீர்" என்று கூறினார்.

கடவுள் அருட்டிறம்

நமக்குள் அடங்கினவன் கடவுள் ஆகான்; கடவுள் நமக்குள் அடங்காதவன். அப்படிப்பட்ட கடவுளின் தன்மை யாது? நம் நிலைமைக்குத் தக்கவாறு அவன் நம்மைப் பக்குவப்படுத்துதல் வேண்டும். உதாரணமாக ஒரு பள்ளிக்கூடத்தை எடுத்துக்கொள்ளலாம். அப்பள்ளிக்கூடத்தில் பல வகுப்புக்கள் இருக்கின்றன. வெவ்வேறு வகுப்புக்களில் படிக்கும் மாணவர்தம் படிப்பும், திறனும் வெவ்வேறே. அவரவர் நிலைமைக்குத்தக்கவாறே ஆசான் கல்வி புகட்டுவான். ஆசானைப்போன்றவன் கடவுள். பிள்ளைகளே ஆன்மாக்கள். ஆன்மாக்களின் தன்மைக்கேற்பப் பரிபக்குவப்படுத்துதலே ஆண்டவன் அருட்டிறம். எப்படி ஆசான் பிள்ளைகளிடத்துத் தம் திறமனைத்தையும் காட்டமாட்டாரோ, அவ்வாறே ஆண்டவனும் ஆன்மாக்களிடத்துத் தன் திறமனைத்தையும் காட்டமாட்டான்.

நம்முடைய சக்தியெல்லாம் மூன்றில் அடங்குவன. அவையே நாமம், ரூபம், கிரியை எனப்படும். அவன் நம்மை

ஆட்கொள்ள ஓர் இடத்தை அடைகிறுன். உதாரணமாக மயிலாப்பூரை எடுத்துக் கொள்வோம். அவனது வடிவம் ஆண் பெண் ஒன்றியது. நாமும் நம்முடைய சக்தியும் ஒன்றுபட்டாலேயே நாமாகிறேும். நம்மிடத்திருந்து சக்தியை வேருகப் பிரித்தல் முடியாது. அதுபோன்று அவன் வடிவத்திலிருந்து ஆணேயும், பெண்ணேயும் தனித்தனி யாகப் பிரித்தல் முடியாது. அவன் ஆண் பெண் வடிவோடு பிள்ளேகளுடனும் காட்சி யளிக்கிறுன். இறுதியில் நோக்குழி, எல்லாம் அவனுகவே யிருக்கிறுன். எனவே, வேதம் ஆத்மாவே புத்திரனுகிறுன் என்று கூறு கிறது. நாம் கடவுளே நினைக்கும்போது நம்மைப்போலவே அவனேப் பாவிக்கிறேும். அவன் பல வாகனங்களில் வருதல் அவனுடைய உயர்வைக்காட்டுவது. அவ்வாறு வாகனங்களின் மீது வரும்கோலத்தையே நாம் உத்ஸவம் என்கிறேும்.

உத்ஸவம்

இனி உத்ஸவத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். உத்ஸவம் என்னும் பதம் உத்ஸூயுதே என்னும் பதத்திலிருந்து பிறந் ததாகும். சுகத்தை உண்டுபண்ணுவதென்பது அதன்பொரு ளாகும். உத்=மேலான பரமேசுவரனுடைய, ஸவம்=வெளி யுலாவுதல் என்றும் பொருள் கொள்ளலாம். ஜனங்களே நல் வழிப்படுத்தல் என்பது இதன் பொருளாகும். உத்ஸவத்தின் தாத்பரியங்கள் நான்கு. அவை வருமாறு:—(1) சிருட்டிசெய் தல் (2) தம்மை வெளிக்காட்டல் (3) சுகத்தைக் கொடுத்தல் (4) வந்து பார்த்தல். முன்னர்க் கூறியவாறு சம்ஹாரத்தில் அனுக்கிரகம் அடங்கும். சம்ஹாரம் என்பதன் பொருளே துக்கம்போய்ச் சுகம் வருதல் என்பதாகும். ரதாரோகணம் சம்ஹாரத்தின் பாற்பட்டது. தேர் என்றுல் சம்ஹாரம் என்று பொருள்.

இரதோத்ஸவம் சில ஊர்களில் ஏழாவது நாளிலும், சில ஊர்களில் ஒன்பதாவது நாளிலும் நடைபெறுகிறது. இரதோத்ஸவத்தின் உட்கருத்தை உன்னிப் பாருங்கள். பூமியையே ஆண்டவன் இரதமாகக் கொண்டிருக்கிறான். பூமிக்கு இருவித ரூபம் உண்டு. ஒன்று பிராகிருதம்; நேரிற் காண்பது. மற்றொன்று தெய்விகம். பூமியைப் பூமிதேவி என்று கூறுதல் உபசரிப்பு. இது, தேவதையை அதிதேவதை என்று கூறினாற்போல. இத்தெய்விகத் தன்மையைக் கருதியே திருவிளையாடற் புராண உத்தரகுமாரப் படலத்தில் 'மேருமலை மனைவியுடன் பேசினான்' என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது.

தேர்

பூமியாகிய தேரிற் கட்டப்பட்ட குதிரைகள் நான்கு. அவற்றின் நிறம் வெண்மை. இந்நான்கு குதிரைகளும் தோஷமில்லாத நான்கு வேதங்களைக் குறிக்கின்றன. வேதம் என்னும் பதம் வித் என்ற தாதுவின் அடியாகப் பிறந்த சொல். வேதங்கள் தர்மத்தைக் கூறுகின்றன வென்று தைத்திரியோபநிஷத் கூறுகிறது.

சாரதி

இவ்வித இரதத்துக்குச் சாரதியாக அமைந்தவன் பிரமன். ஆண்டவன் வேதங்களைப் பிரமாவுக்குக் கற்றுக்கொடுத்தான். எதன்பொருட்டு? அவன் மூலமாக வேதங்கள் உலகில் பரவுதல் வேண்டும் என்று கருதியே. பிரமனுக்கு நான்கு முகங்கள். ஒவ்வொருமுகமும் ஒவ்வொரு திசையைப் பார்க்கின்றன. அதனால் தேருக்கு எவ்வித ஆபத்தும் உண்டாகாது. எனவே, பூமியாகிய இரதத்தை வேதமாகிய குதிரைகளைப் பூட்டி ஒழுங்காக நடத்துபவன் பிரமா.

சக்கரங்கள்

இப்பூமியாகிய இரதத்துக்குச் சக்கரங்களாக அமைந்தவர் சூரிய சந்திரர். சூரியசந்திரர் இவ்வுலக வளர்ச்சிக்கு இன்றியமையாதவர். எனவே, இரதத்துக்கு முக்கியமான சக்கரங்களாக அவர்கள் அமைந்தார்கள். சூரியன் அசுத்தத்தைப் போக்குவது. இதையொட்டியே இக்காலத்துக் கோயில்களில் சூரியன் முதல் சண்டேசுரர் ஈறாக உள்ளவர்களுக்குப் பூசைகள் நடைபெறுகின்றன. கோயில்களில் முன்காலத்தில் நவக்கிரகங்கள் கிடையா. பைரவர் கோயில் காவலர். அவருக்குப் பக்கத்தில் இருப்பவர் சூரியர். அவர் இல்லாவிட்டால் சிவ பூசைஇல்லை. ஆன்மாவைச் சத்வகுணத்தில் புகவைப்பது சூரியன்; இன்பத்தை உண்டாக்குவது சந்திரன். சூரியன் முன் சூரியகாந்தக்கல் நெருப்பை உண்டாக்குகிறது. இது சிருஷ்டியைக் குறிப்பது. சூரியோதயத்தைக் கண்டு தாமரை மலர்கிறது. அது ரட்சையின்பாற் படும். நீரிலிருந்து தாமரைக் கொடியைப் பிடுங்கி எறிந்தால் அது தன்னை மலர்வித்த சூரியனாலேயே எரிக்கப்படுகிறது. இது சம்ஹாரம். எனவே, சூரியனிடத்திலேயே சிருஷ்டி, ரட்சை, சம்ஹாரம் என்ற முக்குணங்களும் அடங்கியுள்ளன.

வில்

சிவபெருமான் கையில் வில்லைத் தாங்கியுள்ளார். கால் பெருவிரல் முதல் நெற்றிவரை உள்ளது வில். தனக்குக் குறைந்த மேருவைக் கடவுள் வில்லாகத் தாங்கியுள்ளார். மேருமலை பொன்வடிவாயுள்ளது. ஆண்டவன் அனல்வடிவினன். அனலின்முன் பொன் உருகுதல் இயற்கை. அதனால் வில் உருகுந்தன்மையுடையது. மற்றவர்களைப் பாவத்துக்குள்ளாக்குதல் கூடாதென்றெண்ணியே ஆண்டவன் வில்லை

வந்தியுள்ளான். அவ்வில்லுக்கு அம்பாக உள்ளவர் விஷ்ணு. அதன் நுனி அக்கினிதேவன். எதிரிகளை அக்கினி எரிக்கும். வில்லுக்கு நாணாக அமைந்தது ஆதிசேஷன். அவன் அறிவிற் சிறந்தவன். அறிவு இல்லாவிடின் எக்காரியமும் நடைபெறாது. இந்த இரதத்தின் இறகுகளாக உள்ளவன் வாயு.

பொதுவாகச் சமுத்திரத்தின்மீது போகும் போதும், சண்டைக்குச் செல்லும்போதும், தனம் தேடப் போகும் போதும் மனைவியுடன் செல்லுதல் கூடாது. ஆனால் ஆண்டவன் யுத்தத்துக்குப் போகும்போது மனைவியை உடன் அழைத்துச் செல்கிறான். பெண்மை இரக்கத்தைக் குறிப்பது. எனவே, சக்தி உடன் செல்வது ஆண்டவன் இரக்கநெஞ்சை உடையவன் என்பதைக் காட்டுகிறது. இரதத்தில் இளங் குழந்தையும் உடன் செல்கிறது.

முப்புரமெரித்தல்

இவ்வாறு இரதத்தில் எதற்காகச் செல்கிறார்? முப்புரத்தை எரிப்பதற்காக. மனிதருக்கு மூன்று சரீரங்கள் உண்டு. அவை ஸ்தூலம், சூக்குமம், காரணம் எனப்படும். அம்மூன்று உடலங்களுக்கும் காரணமா யிருப்பவை மூன்று மலங்கள். அவைகளே ஆணவம், கன்மம், மாயை எனப்படும். இம்மூன்று மலங்களையும் அழிப்பதற்காகவே ஆண்டவன் மும்மல காரியத்தை மேற்கொண்டார். எனவே, 'முப்புரமாவது மும்மல காரியம்' என்று திருமந்திரம் கூறுகிறது. மும்மலங்களுக்கு மோகம் முதலிய பதின்மூன்று காரியங்கள் உண்டு. மலங்களில் மூன்றுவிதம் இருத்தல் போல மனிதரிலும் மூன்று வித மானவரைக் காணலாம்.

கடவுளின்றி இவ்வுலகத்தில் நாம் எதையும் செய்தல் இயலாது. கண்மட்டும் ஒரு பொருளைக்காண முடியாது. அக்கண்

ணோடு உயிரும் சேர்ந்தாலேயே பொருள்களைக்காணுதல் கூடும். அதுபோலவே உயிரோடு ஆண்டவன் சேர்ந்தாலேயே உயிருக்கும் இயங்கும் சக்தி உண்டாகிறது. கடவுளிடத்து நாம் இடையறு அன்புடையவராய் இருத்தல் வேண்டும். இதுவே அயரா அன்பு என்று கூறப்படுகிறது. பாரபக்தி என்பது மேலான பக்தியாகும். இரதோத்ஸவத்தில் பாரபக்தி மார்க்கமும் உண்டு. கெட்ட பக்தியும் உண்டு. பாரபக்தியால் நல்ல நிலையைப் பெற்றவர் மூவர். அவரே சுதன்மன், சுசீலன்,. சுபுத்தி என்போர். அவர்கள் முறையே தர்மம், ஆசாரம், அறிவு என்ற மூன்றையும் குறிப்பவர்கள். கெட்ட பக்தியால் இறந்தவர் மூவர். அவர் தாரகாட்சன், வித்யுந்மாலி, கமலாட்சன் எனப்படுவோர்.

தேஹூர்ந்த திரிபுராந்தகன், அக்கினி, பிரமா, வாயு முதலியவர்களைக் கொண்டு வெற்றி பெற்ருல் அவர்களுக்குக் கர்வம் உண்டாகும் என்று எண்ணிப், புன்சிரிப்பாலேயே முப்புரங்களையும் எரித்தான்.

வி. பி. அறிக்கை

தங்கள் சந்தாவை 31-12-1937-க்குள் செலுத்தாத அங்கத்தினர்க்கு ஜனவரிமீ இதழ் வி. பி. மூலம் அனுப்பப்படும். வி. பி. செலவு சேராதபடி சந்தாவை மணியார்டர் செய்வது நலம்.

சைவத்தேர்வு வினுக்கள் - 1937

சைவ சித்தாந்த சாத்திரங்கள்

காலம் 3 மணி] [அமிசம் 100.

I (a) 'சிவஞான போதத்'திற் காணும் இயல்கள் எவை?

(b) அரனுடன் ஒன்ருகி நிற்கவும், செய்தொழிலை யெல்லாம் அரன்பணி யென்று கொள்ளவும் ஆன்மாவிற் கறிவுறுத்தும் சூத்திரம் எத்தனையாவதா யுள்ளது? எவ்வியலைச் சார்ந்தது?

II சிவதீக்ஷையில் வருணமும் ஆச்சிரமும் பற்றித் தாரதம்மியம் கூறுதல் பொருந்துமா என்பதை ஆராய்க. அல்லது இறைவன்பால் ஆன்மாவிற்கு மெய்யன்பு எக்காரணத்தால் எப்போதெழு மென்பதையும், அஃதுடையார் உடம்போடு கூடியிருக்குமளவும் எவ்வாறு வாழ்வ ரென்பதையும் விளக்குக.

III 'சிவஞானபோத' முதற் சூத்திரங் குறிக்கும் சங்காரகாரணர்க்கும் திரிமூர்த்திகளுள் ஒருவராகிய உருத்திரர்க்கும் உள்ள பேதம் யாது?

IV முதல்வன் ஆன்மாவிற்குச் செய்யும் உபகாரம் யாது? அது பெறுதற்குரிய தகுதி ஆன்மாவின்பால் எவ்வாறமைந்துள்ளது?

V முப்பொருளுண்மையை ஒப்புக்கொண்டால், முதல்வன் பரிபூரணத்திற் கிழுக்காகுமே என்னுங் கூற்றை ஆராய்க.

அல்லது

'அத்துவிதம்' என்னுஞ் சொற்கு ஏகான்மவாதியரும் சைவ சித்தாந்திகளும் கொள்ளும் பொருள்களை எடுத்துக் காட்டுக.

VI (a) "உராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே."
—உரை வரைக.

(b) (i) சற்காரியவாதம் (ii) இருவினையொப்பு (iii) அட்டபுட்பம் (iv) சித்தாந்த மகா வாக்கியம் இவற்றிற்குக் குறிப்பு எழுதுக.

VII (a) 'தத்துவப் பிரகாசிகை'யின்படி பாசபதார்த்தங்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

(b) சிவதத்துவத்திற்கேனும் மாயைக்கேனும் இலக்கணங் கூறுக.

VIII ஆன்மாவிற்கும் புருட தத்துவத்திற்குமுள்ள சம்பந்தத்தையேனும், தன்மாத்திரைகட்கும் பஞ்சபூதங்கட்குமுள்ள சம்பந்தத்தையேனும் விளக்குக.

IX (a) சங்காரத்தின் நோக்க மென்ன?

(b) மகாப் பிரளயத்தில் எஞ்சியிருப்பவை எவை?

X பிரகிருதியையும் புருடனையும் பற்றிச் சாங்கியமும் சைவசித்தாந்தமும் கொண்டுள்ள கருத்துக்களைப் புலப்படுத்துக.

XI முத்திநிலையில் சிவனுக்கும் ஆன்மாவுக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றித் 'தத்துவ சங்கிரகம்' கூறுவது யாது?

XII (a) 'தத்துவத் திரய நிர்ணயம்' என்னும் நூல் எந்த ஆகம சம்பந்தமான பொருள்களை யறிவிப்பது? யாரால் இயற்றப்பட்டது?

(b) பரமசிவனுக்கும் சகள நிஷ்கள முதலிய பேதமும், ஈசான தற்புருட முதலிய பேதமும் நூல்களிற் கூறப்படுவதை எவ்வாறு கொள்ளலாம்?

சைவ இலக்கியங்கள்

காலம் 3 மணி] [அமிசம் 100.

I (a) i) "தேவாரம்" (ii) "திருவாசகம்"—பெயர்ப்பொருள் விளக்குக.

(b) அகத்தியர் தேவாரத் திரட்டிலுள்ள பதிகங்கள் நுதலும் பொருள்கள் எவை?

II (a) பின் வருவனவற்றுள் கீழ்க்கோடிட்டிருக்கும் சொற்களில் நான்கிற்குப் பொருள் எழுதுக.

(i) ஊனத்தை நீக்கும் உடலே போற்றி. (ii) புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி. (iii) கமையாகி நின்ற கனலே போற்றி. (iv) காசைசேர் குழலாள். (v) முளிறு இலங்கு மழுவாளன்.

(b) பின் வருவனவற்றுள் யாதானும் ஒன்று குறிக்கும் சரிதம் ஈதெனச் சுட்டுக.

(i) மணியார் வைகைத் திருக்கோட்டினின்றதோர் திறம்.

(ii) பெயர்த்தும் பன்னிருவேலிகொண்டருளும்செய்கை.

(iii) மூவரிலிருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல் காவலாளர்.

III (a) "வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாத னுமம் நமச்சி வாயவே"—உரை வரைக.

அல்லது

தீயோர் எல்லாத் தீங்கினும் நீங்குதற்குத் திருஞானசம்பந்தர் காட்டியருளும் உபாயத்தை எடுத்துரைக்க.

(b) "நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன் நாவினுக் கரையன்" எனவரும் திருப்பாசுரத்திற் குறிக்கப்பட்டுள்ள நாயன்மார்கள் செய்தனவாகக் கூறப்பட்ட குற்றங்கள் யாவை? எவ்வாறவற்றை இறைவன் குணமெனக் கொண்டான்?

IV (a) பின் வருவனவற்றில் மூன்றிற்குப் பொருள் எழுதுக :—

(i) "மந்திர மாமலை மகேந்திர வெற்பன்"

(ii) "திருத்தகும் அறுவகைச் சமயத் தறுவகையோர்"

(iii) "விச்சுக்கேடு பொய்க்காகா தென்றிங் கெனைவைத் [தாய்"

(iv) "இரண்டுமிலித் தமியனேன்."

(b) பின் வருவனவற்றிலுள்ள கதைகளைக் குறிப்பிக்க:—

(i) " தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடர்க் கீந்த விளைவும் "

(ii) " ஓரி யூரி னுகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்"

V (a) பிரபஞ்ச விரிவையும் இறைவன் அதனின் மேம்பட்டு நிற்குமாற்றையும் "திருவண்டப்பகுதி" எவ்வாறு புலப்படுத்துகின்றது?

(b) சிவன் சதுர்த்தப்பொருள் என்பதற்குத் திருவாசகத்திலிருந்து பிரமாணங் காட்டுக.

VI (a) "விச்ச தின்றியே விளைவு செய்குவாய்"—இஃதெங்ஙனமாகும் என்பதை விளக்குக.

(b) நம்மாழ்வார் பாசுரமொன்றிற் பயிலும் பழமொழியொன்றை, அல்லது அப்பர் மறுமாற்றத் திருத்தாண்டகத்திற் காணும் அடியொன்றை நினைவூட்டும் திருவாசக அடியை எழுதுக.

VII அப்பர் திருவவதார காரணம் ஈதெனக் காட்டி, அது எவ்வளவில் நிறைவேறியது என்று மிகச் சுருக்கமாக விளக்குக.

அல்லது

அப்பர் சமணத்திலிருந்து சைவந் திரும்பியபோது செய்யப்பட்ட பிராயச்சித்தம் ஈதெனக் கூறி, அது இந்நாளிற் புறச்சமயத்திருந்து சைவஞ் சேர விரும்புவோர்க்கும் சாலுமா என்று ஆராய்க.

VIII வருணமும் ஆச்சிரமும் சமயத்தில் மாய்ந்துபோம் என்பதற்கு அப்பர் சரிதத்திற் கிடைக்கும் உதாரணங்களைச் சுட்டுக.

அல்லது

அப்பர் சமணிலிருந்து சைவந் திரும்பு நிலையில், "சலம்பூவொடு தூப மறந்தறியேன்" எனவரும் பாசுரத்தைப் பாடியது எவ்வாறு உண்மையாகும் என்பதைப் புலப்படுத்துக.

IX (a) சம்பந்தரைக் குறிக்கும் அப்பர் பாசுரமெது?

(b) அப்பர் மூவாசையுந் துறந்தவர் என்பதைக் குறிக்கும் அவர் செயல்களைச் சுட்டுக.

(c) "இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
அருளுமெய் யஞ்செழுத் தாசை யிக்கடல்
ஒருகன்மே லேற்றிட லுரைக்க வேண்டுமோ"

—குறிப்புரை வரைக.

X (a) திருக்குறட் 'கடவுள் வாழ்த்'தில் காணப்படும் இறைவனிலக்கணங்களுள் இரண்டைச் சுட்டி, அவை சைவ சித்தாந்தக் கருத்தாமாறு புலப்படுத்துக.

(b) (i) 'மறத்திற்கும் அன்பே துணை'—யாங்ஙனம்?

(ii) "வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்"

(iii) கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்
செல்லா துயிருண் ணுங் கூற்று" [மேற்
—கோடிட்ட பகுதிகட்கு விசேஷ வுரை வரைக.

(c) "நத்தம்போற் கேடும்......" எனவரும் குறட்பாட்டிற்குப் பதவுரை வரைக.

XI "அவ்வித்தழுக்கா றுடையானை" எனவருங் குறட்பாவில் 'அவ்வித்து' என்னும் சொற்கும், "மறந்தும் பிறன்கேடு" எனவரும் குறட்பாவில் 'சூழும்' என்னும் சொற்கும் பரிமேலழகர் காணும் பொருள் என்ன ? அவற்றின் பொருத்தத்தைப் புலப்படுத்துக.

அல்லது

வீட்டினைப் 'போாவியற்கை' என்றதன் பொருத்தத்தை விளக்கி, அவ்வியற்கையைத் தருவதிது வெனக் கூறுக.

XII (a) ஆசாரியர்க்குரிய விசேட இலக்கணங்கள் எவை ?

(b) அந்தரியாக பூசை செய்யும் விதத்தையேனும், அது செய்ய மாட்டாதார்க்கு விதிக்கப்பட்ட பூசை முறையையேனும் குறிப்பிடுக.

(c) "............அறிவுக் கடையாளம்
என்ப ருணர்ந் தோர்சிவன்வாக் கீண்டு"—விடுபட்ட இரண்டு சொற்களை நிரப்புக.

(d) பின்வருவனவற்றில் நான்கனுக்குக் குறிப்பெழுதுக:-

(i) மூலாகமம் (ii) சதாசிவ மூர்த்தியின் முகங்களின் நிறமும், அவை நோக்குந் திசையும் (iii) சந்நியாசிகளின் வகை (iv) சாதியும் சந்நியாசமும் (v) மூர்த்திபர் (vi) சத்திநிபாதம் (vii) பன்னாள் வைத்திருந்து சாத்தத்தக்க பூக்கள்.

இளஞ்சைவப் புலவர் தேர்வு - 1937

சைவ சாத்திரம்

2½ மணி] [மார்க்கு 100.

1. முதல்வனது தடத்த லக்கணம் யாது? அத்தடத்தத் திருமேனி எப்பொருளாலாயது (10 மார்க்கு)

2. சிவபிரானே வணங்கற்பால னென்பதற்குத் தக்கனுந் தண்டீசனு மெங்ஙனஞ் சான்றாவ ரென்பதை விளக்குக. (10 மார்க்கு)

3. மாணத்தின்பின் உயிர்களடையும் நிலையைவரைக. (15மார்க்கு)

4. புரியட்டக உடம்பின் தத்துவங்களை வரைக. (5 மார்க்கு)

5. சிவஞானபோத முதலிரண்டு சூத்திரங்களையும், அவற்றின் பொழிப்புரையையும் வரைக. (10 மார்க்கு)

6. முப்பத்தாறு தத்துவங்களையும் சித்து, சித்த சித்து, அசித்தாகப் பிரித்து வரைக. (12 மார்க்கு)

7. முத்தி சாதனமாகிய அந்தரியாகம் யாது? (7 மார்க்கு)

8. பரமசிவன் நான்காந்தெய்வ மென்பதற்கு மூன்று எடுத்துக் காட்டுகள் வரைக. (9 மார்க்கு)

9. பஞ்சாக்கினி வித்தை யெனப்படுவதியாது? (7 மார்க்கு)

10. அத்துவிதச்சொற்கு இன்மை, அன்மை, மறுதலைப் பொருள் சுருக்கி வரைக. (15 மார்க்கு)

சைவ இலக்கியம்

2½ மணி] [மார்க்கு 100.

I 1. "நலமில நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன், சலமிலன் பேர் சங்கரன்" இக்கருத்துடைத் தேவாரப் பாடலை யெழுதி உரைவரைக. (10 மார்க்கு)

2. இறைவனை மறந்தநாட்களெல்லாம் நாட்களெனச் சுந்தரர் அருளினர். (5 மார்க்கு)

3. "என்போலிகளும்மை இனித்தெளியார்" எனச் சிவபெருமானை நோக்கிக் கூறியது யாவர்? அஃதெந்நிலையிலென்பதை விளக்குக. (10 மார்க்கு)

II 1. மணிவாசகனார் நீத்தல் விண்ணப்பத்திற் றம்மைக்குறித்துக் கூறிய உவமானங்களுள்ள ஐந்து வாக்கியங்கள் வரைக. (10 மார்க்கு)

2. "ஈர்க்கின்ற அஞ்சொடச்சம் வினையேனை இருதலையே", "விடலில்லடியா ருடனிலமேமன்னும் மடலின்மட்டே" இவற்றிற்குப் பொழிப்புரை வரைக. (5 மார்க்கு)

III 1. "அண்டர் நாயகனார் என்னை அறிவரேல் அறியாவாய்மை, எண்டிசை மாக்களுக்கியான் எவ்வுருவாயென்" எனக் கூறியது யாவர்? அஃதெந்நிலையி லென்பதை விளக்குக. (10 மார்க்கு)

2. காரைக்காலம்மையார் கயிலை இறைவன்பாற் செய்த விண்ணப்பமுள்ள பாடலை வரைக. (5 மார்க்கு)

3. கையகன்று, கலையிளந் திங்கட்கண்ணி, காமருகழனி வீழ்த்து, கைவரு கற்புடைநெறி, இணரலங்கல் மைந்தன், இவற்றிற்கு உரைவரைக. (5 மார்க்கு)

IV திருநீலகக்க நாயனார் வரலாற்றைச் சுருக்கி வரைக. (10 மார்க்கு)

V 1. அருள்பிறத்தற் குபாயங் கூறுங் குறட்பாவை யெழுதுக. (5 மார்க்கு)

2. பொய்ம்மை வாய்மைகளின் இலக்கணத்தை வரைக. (8 மார்க்கு)

3. அறம் "பொன்றுங்கால் பொன்றாத் துணை", "வாழ்நாள் வழியடைக்குங் கல்" இவற்றை விளக்குக. (5 மார்க்கு)

VI 1. ஆசாரியரையும், சிவனடியாரையும் வழிபடு முறையை வரைக. (6 மார்க்கு)

2. சந்தியாவந்தனஞ் செய்தற்குரிய உத்தம காலங்களையும்; நான்காஞ் சந்தி யாது, அஃதெவர்க்குரிய தென்பவை களையும் எழுதுக. (6 மார்க்கு)

பெரிய புராணம்

செந்தில்வேல் முதலியார் பதிப்பு

ராயல் அளவு முழு கலிக்கோ பைண்டு

ஒவ்வொரு புராணத்தின் இறுதியில் வசனமும் சேர்க்கப்பட்டுள்ளது.

பிரதி ஒன்றின் விலை ரூ. 1 6 0
ஆறு பிரதிகள் ,, ,, 7 8 0 } தபாற் கூலி வேறு.

கிடைக்குமிடம் :—

சைவசித்தாந்த மகாசமாஜம்,
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத்தெரு, மயிலாப்பூர், சென்னை.

தத்துவக் கட்டளை

பராபரமாகிய பரமேசுரன் தராதலம் படைக்கத் தான் நினைந்தருளினான். பராபரத்தில் பரந்தோன்ற, பரத்திற் சிவந் தோன்ற, சிவத்தில் சத்தி தோன்ற, சத்தியில் நாதந் தோன்ற, நாதத்தில் விந்து தோன்ற, விந்துவில் சதாசிவந் தோன்ற, சதாசிவத்தில் மயேச்சுரன் தோன்ற, மயேச்சுரத் தில் ருத்திரன் தோன்ற, ருத்திரத்தில் விஷ்ணு தோன்ற, விஷ்ணுவில் பிரமன் தோன்ற, பிரும்மாவில் ஆகாசம் தோன்ற, ஆகாசத்தில் வாயு தோன்ற, வாயுவில் அக்கினி தோன்ற, அக்கினியில் அப்பு தோன்ற, அப்புவில் பிருதுவி தோன்ற, பிருதுவியில் அன்னந் தோன்ற, அன்னத்தில் நர மிருக பசு பக்ஷி தாவர சங்கமந்தோன்றின. இனித் தோன் றின அடைவே யொடுங்க, பசு பக்ஷி தாவர சங்கமம் அன் னத்திலே யொடுங்கி, அன்னம் பிருதிவியிலே ஒடுங்கி, பிருதிவி அப்புவிலொடுங்கி, அப்பு தேயுவிலொடுங்கி, தேயு வாயுவிலொடுங்கி, வாயு ஆசாசத்திலொடுங்கி, ஆகாசம் பிரம் மாவிலொடுங்கி, பிரம்மா விஷ்ணுவிலொடுங்கி, விஷ்ணு உருத் திரனிலொடுங்கி, ருத்திரன் மயேச்சுரத்திலொடுங்கி, மயேச் சுரன் சதாசிவத்திலொடுங்கி, சதாசிவன் விந்துவிலொடுங்கி, விந்து நாதத்திலொடுங்கி, நாதம் சத்தியிலொடுங்க, சத்தி சிவத்திலொடுங்க, சிவம் பரத்திலொடுங்க, பரம் பராபர மாகிய பரமேசுவரனிலொடுங்கு மென்றவாறு. இவை தோற்ற ஒடுக்கம்.

இனி, இந்தச் சரீரம் தன் விரலால் (கூசு) (96) விரற் பிரமாணம். நீளம் எண்சாணுடம்பு, நாற்சாண் பருமை, ௩௨ (3½) கோடி ரோமத்துவாரமும் எ௨000 (72000)

நரம்பும் நாடியும் ௩௨ (32) முழுக்குடலும் ௯௨ (92) சந்தும், ௭௦ (70) பேரெலும்பும், எண்பல ஈரலும், நாளுழியுதிரமும், ௩௨௦ (320) மாங்கிஷக்கூற்றையும், உழக்குப்பித்தமும் ஆழாக்குச் சோரமுமாக இப்படிக் கோத்த சரீரத்தில் தத்துவம் ௯௬ (96); அவையாவன: வாசல் ௯, பொறிகள் ௧௦, புலன்கள் ௧௦, ஆதாரம் ௬, மண்டலம் ௩, நாடிகள் ௧௦, வாயு ௧௦, தாது ௭, ராகம் ௮, கோசம் ௫, கரணம் ௪, அவத்தை, ௫, குணம் ௩, மலம் ௩, வியாதி ௩, ஆக தத்துவம் ௯௬.

இதில் வாசல் ஒன்பதாவன : செவி ௨, கண் ௨, நாசி ௨, வாய் ௧, குதம் ௧, குய்யம் ௧, ஆக வாசல் ௯.

பொறிகள் பத்தாவன : சோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம். இவை அஞ்சுக்கும் ஞானேந்திரியமென்று பெயர். ஞானேந்திரியமென்பானேனென்னில் இருந்த விடத்திலே நின்று மாறுகையினாலே இப்பெயர் பெற்றது. இவையிற்றின் செய்தியாவன: சோத்திரமென்கிறது செவி. இதற்கு விஷயம் சத்தம். செவி ஆகாசமிடமாக நின்று சத்தத்தை யறியும். தொக்கு என்கிறது உடம்பு. இதனுடைய விஷயம் பரிசம்; உடம்பு வாயுவிடமாக நின்று பரிசத்தை யறியும். சட்சு என்கிறது கண். இதனுடைய விஷயம் ரூபம். கண் தேயுவிடமாக நின்று ரூபத்தைக் காணும். சிங்குவை என்கிறது நாக்கு. இதனுடைய விஷயம் இரசம். நாக்கு அப்புவிடமாக நின்று இரதத்தை யறியும். ஆக்கிராணமென்கிறது மூக்கு. இதனுடைய விஷயம் கந்தம். மூக்கு பிருதுவியினிடமாக நின்று கந்தத்தை யறியும். இவை ஞானேந்திரியம் ௫.

இனி, கன்மேந்திரியம் ௫ ஆவன. வாக்கு வாதம் பாணி பாயுரு உபத்தம். இவையிற்றின் விஷயம் ௫ ஆவன. வசன

கமன தான விசர்க்க ஆனந்தம். வாக்கு ஆகாசமிடமாக நின்று வசனஞ் செய்யும். பாதம் வாயுவிடமாக நின்று கமனம் பண்ணும். பாணி தேயுவிடமாக நின்று அவை ஏற்குதலிடுதல் செய்யும். பாயுரு அப்பு இடமாக நின்று விசர்க்க மென்கிற சலமலாதிகளைப் போக்கும். உபத்தம் பிருதுவி யிடமாக நின்று ஆனந்தத்தை விடும். இவை கன்மேந்திரியம்.

சத்த பரிச ரூப ரச கந்தம் இவை ஐந்துக்கும் தன்மாத்திரைகளெனப் பெயர். சத்தம் ஆகாசத்திலும் செவியிலும் ஒடுங்கும். பரிசம் .வாயுவிலும் உடம்பிலும் ஒடுங்கும். ரூபம் தேயுவிலும் கண்ணிலு மொடுங்கும். இரதம் நீரிலும் நாவிலு மொடுங்கும். கந்தம் பிருதுவியிலும் மூக்கிலும் ஒடுங்கும்.

இனி, வசனம் ஆகாயத்திலும் வாயுவிலு மொடுங்கும். கமனம் வாயுவிலும் நாவிலு மொடுங்கும். தானம் தேயுவிலும் கையிலுமொடுங்கும். விசர்க்கம் அப்புவிலும் பாயுருவிலு மடங்கும். ஆனந்தம் பிருதிவியிலும் உபத்தத்திலுமடங்கும்.

ஆதாரம் ஆறுவன: மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அனாகதம் விசுத்தி ஆக்ஞை. மூலதாரமாவது காலெலும்பு இரண்டும் கதிரெலும்பு இரண்டுங் கூடினவிடம் குய்யம். குய்யத்துக்கும் குதத்துக்கும் நடு நான்கு சதுரச் சட்டமாய் ஒரு பரமமாய் இதிலுள்ளே திரிகோணமாய் தடப்பம்பூப் போன்றிருக்கும். நான்கு சதுரத்திலும் நிற்கும். அட்சரம் வ ஶ ஷ ஸ. இதற்குப் பிரமாணம்

எருவிடம் வாசற் கிருவிரன் மேலே
கருவிடம் வாசற் கிருவிரற் கீழே
உருவிடுஞ் சோதியை யுள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்துநின் றானே.

—திருமந்திரமாலை - 584

சுவாதிட்டானம்: இலிங்க பீடமாய் வீணதண்டின் அடியுமாய் ஆறிதழை யுடையதொரு பத்மமா யிருக்கும். ஆறிதழிலும் நிற்கும் அட்சரம். ஷ, ஹ, ஃ, ய, ர, ல.

மணிபூரகம்: வட்ட வடிவமாய் நரம்பு நாடிகளுக்கு இருப்பிடமாய்ப் பத்து இதழ்களையுடைய தாமரை மலரின் வடிவமா யிருக்கும். இடம் உந்தி, பத்திதழ்களிலு மிருக்கும் அட்சரங்களாவன:

ஷ ஷ ண த ம உ ந வ ஊ.

அனுகதம்: முக்கோண வடிவமாய் பன்னிரண் டிதழ்களை யுடைய தாமரைப் பூப்போலப் பொன்னிறமுடையதாக விருக்கும். இதழ்களிலுள்ள அட்சரங்களாவன:

க வ ஶ வ ஓ வ ஓ ஜ ஞ என்பன.

இதற்குப் பிரமாணம்:

நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குல
நீசித்தம் வைத்து நினையவும் வல்லயேன்
மாசித்தி மாயோகம் வந்துதலைப் பெய்யுந்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாமே.—திருமந்திரம்581.

அனுகதத்தின் மேல் பத்து விரற்கடையளவில் உள்ள கண்ட கூட ஸ்தானம் விசுத்தி. இது பதினறு இதழ்களை யுடைய பதினறு கோணமாய் வெண்மை நிறமுடையதாய் இருக்கும். இவ்விதழ்களில் நிற்கும் அட்சரங்கள் அ முதல் அஃ ஈறுவன.

இனி ஆக்ஞை இரண்டு பத்ம தளங்களையுடையதாய்ப் புருவமத்தியிலிருக்கும். இதனிலுள்ள அட்சரங்கள் ஐ க்ஷ.

மண்டலம் மூன்றுவன:—அக்கினி மண்டலம் ஆதித்த மண்டலம் சந்திர மண்டலம். அக்கினி மண்டலம் மூலாதாரத்திற்குமேல் நாபி வரை வியாபித்து நிற்கும். ஆதித்த மண்டலம் நாபி முதல் புருவமட்டும் வியாபித்து நிற்கும். சந்திர மண்டலம் புருவமுதல் நிற்கும்.

நாடிகள் பத்தாவன: இடை பிங்கலை சுழுமுனை சிகுவை புருடன் காந்தாரி அத்தி அலம்புடை சங்கினி குகு என்பனவாம்.

[இதற்குமேல் எட்டிற் காணப்படவில்லை. இந்த ஏடு அரசாங்கத்துத் தொன்னூல் நிலையத்தில் சேமித்து வைக்கப்பட்டுளது. அதனிற் கண்டவாறு இங்குக் கொடுக்கப்பட்டுளது.]

வாகீச முனிவர் அருளிய

ஞானமிர்தமூலமும் விளக்கவுரையும்

[திரு ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை,
ஔவைத் தமிழக மாணவர் கழகம், திருவோத்தூர்.]

அகவல் 10.

கலை முதலாய நிலைமலி தத்துவத் (து)
உலைவில் கட்(டு) இவன் உறல்என் ? பின்னர்,
மாயா வுதரம் மரீஇயோன் எங்கணும்
வீயா னாதல்என் ? வினவின், மற்(று) இஃ(து)
ஆய்வின் வாரா அளவைத்தே எனின்,
வீடுறப் பின்னர் விரவிய பந்தம்
கூடா(து) ஒடின், குலவிய போகம்
துய்த்தல் செல்லான் ; செல்லா னாக
எய்த்தல் இன்றாம் இருவினை ; ஆக,
அபவர்க்கம் உற்(று) அடையான் ; உடைஉறு
கறைகடி தகற்றப் பிறகறை பிடித்த
பெற்றியின், இவனுக்(கு) உற்ற வான்பிணி,
மற்றதும் அறிகலை முதலாச் சொற்றரும்
படிகடை யாயவற்(று) ஒடியா(து) உலாவலின்,
நுணங்கிய ஆகனாகி, இணங்(கு) இரி

மாயையின் வயின் இவன் என்றது
ஆயாச் சீர்த்தி அருந்தவ! அறியே.

இது, மலபந்தமுடைய ஆன்மா மாயா வுதரத்தினனுதற்கும், யாண்டும் போக்குவரவு உடையனுதற்கும் காரணம் என்? எனக் காரணம் கூறியது.

குறிப்பு:—மலம் என்றது ஈண்டு ஆணவத்தினை. ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றையும் மும்மலம் என்று வழங்குபவாயினும், தொகுதிப்படாது தனிப்ப மொழிந்த வழி, ஆன்றோரால் ஆணவ மலமே கருதப்படுகிறது. "மலத்துளதாம்" (சிவ. போ. சூ. 1.) என வருதல் காண்க. கொற்றவன்குடி உமாபதி சிவனார், "அறிவு முழுதினையு மறைக்கும் பாகமாம் வகை நின்று, திரோதானசத்தி பண்ணுதலால் மலம் எனவும் பகர்வர்" (சிவப். 2:2) என்பர்; இதற்கு உரை கண்ட இலக்கணம் சிதம்பரநாத முனிவர், "ஆன்மாக்களுடைய ஞானக் கிரியைகளை மறைக்கையினுலே ஆணவ மலத்தை மலமென்பது அனுமதம்," என்கின்றார்; சிந்தனை யுரைகாரர் அஃது உபசாரம் என்பர்.

உரை முடிவு:—இவன் தத்துவத்து உலேவில் கட்டுறல் என்? மாயாவுதரம் மரீஇயோன் வீயானுதல் என்? இஃது ஆய்வின் வாரா அளவைத்து எனின், ஆயாச்சீர்த்தி அருந்தவ! ஆன்மா வீடுறப்பந்தம் கூடாதோடின், பின்னர்ப் போகம் துய்த்தல் செல்லான்; செல்லானுக, இருவினையும் எய்தல் இன்ளும்; ஆகவே, ஆன்மா அபவர்க்கத்தையும் அடையான்; உடையின் கறையை அகற்றப் பிறகரை பிடித்த பெற்றியின், இவனுக்கு வான்பிணி உற்ற மற்றதும் அறிகலே முதலாகப் படிகடையாயவற்றுள் ஒடியாது உலாவலின், நுணங்கிய ஆகனுகி என்றும், மாயைவயின் இவன் ஆயினுன் என்றும் கூறியது இக்கருத்தே பற்றி யென வறிக என்பது.

உரை:—"அனாதியே ஆணவ மலத்தால் கட்டுற்றிருக்கும் இவ்வான்மா, கலை முதலிய நிலைபெற்ற தத்துவங்களால் கெடாத பந்தம் உறுவது ஏன்? பின்னர், மாயா காரியங்களைப் பொருந்திய இவன், எல்லாத் தோற்றங்களிலும் நீங்காது போக்கு வரவு உடையனாவது ஏன்? இஃது அடியேனது ஆராய்ச்சிக்கு எளிதில் அகப்படாத அளவை உடைத்தாய் இருக்கிறது," என்பாயாயின், பிறரால் ஆராய்ந்து காண மாட்டாத புகழைப் பயக்கும் அரிய தவத்தை யுடையவனே! கூறுவல்; அறிவாயாக: ஆன்மா மலத்தின் நீங்கி, வீடு பெறும் பொருட்டுக் கலை முதலிய தத்துவங்களாலாகிய தேகத்தோடு கூடாது போவானாயின், பின்னர்க் கன்ம பலத்தை நுகரமாட்டானாம்; மாட்டானாகவே, இருவினையும் கெடுதல் இல்லையாகும்; ஆகவே, இவன் முத்தியையும் அடையான். ஆடையின்கட் பற்றிய அழுக்கினை விரையப் போக்குதற்குப் பிறிதோர் அழுக்கு மண்ணைப் பற்றுவிக்கும் தன்மைபோல, இவனை மலப் பொதியாகிய தனுகரணாதிகள் வந்து அடைந்தன. மேலும், கலை முதலாக நிலம் ஈறாகச் சொல்லுதற்கரிய தத்துவங்களோடு கூடி ஒழிவின்றிப் போகம் நுகர்ந்து வருவதால், இவன் நுண்ணுடம்புடையன் என்றும், ஒப்பில்லாத மாயை இடத்தனவன் என்றும் நூலோர் கூறியது இக்கருத்தேபற்றி எனவும் அறிக.

"கலைமுதலாய" என்பது முதல், "அளவைத்தே" (5) என்பது வரை மாணவன் கூற்று. "ஆய்வின் வாரா அளவைத்தே" (5) என்பது, "கட்டுறல் என்?" என்றும், "வீயானாதல் என்?" என்றும் வினா எழுதற்கு ஏது கூறியதாயிற்று.

"பின்னர் மாயாவுதாம் மரீஇயோன்" (3) என்றதனால், முன்னர்க் கேவலத்தில் ஆன்மா ஆணவமல சம்பந்தமுடையனாய் நின்றமை பெறப்பட்டது. ஒன்றனதாற்றலால்

இயைபுடைய பிறிதொன்று பெறப்படும் என்பது இலக்கண முடிபு. ஆன்மா கேவலத்தில் ஆணவ சம்பந்த முடையனாய் நிற்குமாறு "மலநனி புணர மறைவோன்" (அக. 8 : 8) எனப் பிறாண்டு ஆசிரியர் கூறியவாற்றானும், "செம்பினிற் களிம்பேய்ந்து என்றும் அஞ்ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே" (சிவ. சித். II. 80) என்று பிற சான்றோர் கூறுமாற்றாலும் உணரப்படும். கலை முதலாக நிலைபெற்றுள்ள தத்துவம் முப்பத்தொன்று. அவை, பூதம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, இந்திரியம் பத்து, கரணம் நான்கு, வித்தியா தத்துவம் எழு. இவை நிலைபெறுதலாவது தத்தம் எல்லையிறவாது நிற்றலும், இன்றியமையாது நிலவுதலுமாம். காரணத்தின் பண்பு காரியத்தினும் விளங்கும் என்னும் நியாயத்தால், மாயையின் அழியாப் பண்பு, அதன் காரியமாகிய தத்துவக் கூட்டத்தும் விளங்குமாறு தோன்ற "நிலைமலிதத்துவம்" (1) என்றாராம். போகநுகர் தற்கண் கருவியாய் நிற்கும் கலைமுதலாக நிலம் ஈறாகவுள்ள தத்துவங்கள் ஆன்மாவுக்குக் கரணமேயாயினும், ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாய் நீக்கமின்றி உடனாய் நிற்கும் நிலைமைகுறித்து, அதன்காரியமாகிய தேகசம்பந்தத்தை "உலைவில் கட்டு" (2) என்றார். மாயை அழியாப் பண்பிற்றென்பது, "ஆதியோதிய மேதகு மாயை, கோதின்றேகம் நாசமது அணையாது" (அக. 22:1:2) எனப்பிறாண்டும் கூறுவர். இத் தத்துவங்கள் பரமனால் தேடப்படாமல், அவை பரமனருளால் அவனைத் தேடிவந்தடைவன எனக் கேட்டறிந்தானாகலின், "உறல் என்" என்றான். இவை சடமாயினும், ஆன்மாவை அடைவிக்கும் தொழின்மை பரமன் திருவருளதாகலின், அதுகுறித்து இவைசெய்வதாக உபசரிப்பது நூலாசிரியன்மாரது வழக்கு ; ஆவியைத் தேடித்தேடி அலமரும் உடலம்ஒத்தாள்" எனவீரகவியார் கூறுமாறு காண்க. இந்நூலா

சிரியரும், தத்துவம், ஆன்மாவை அடையுமாற்றினை, "இவனுக்கு உற்றவான்பிணி,, (12) எனஉறுதல்வாய் பாட்டாற் கூறுமாறு காண்க. மாயாகாரியமாகிய உடம்பின்கண் நின்று புவன போகங்களை நுகர்வது குறித்து "மாயாவுதரம் மரீஇயோன்" என்றார். மாயா உதரம் மரீஇயதன் பயனாக, தன் உண்மை வடிவினை மறந்து, மாயைகாட்டும் பொய்ப்போகங்களை நுகருமுகத்தால் செய்யும் கன்மங்கட்கு ஈடாக எய்தும் உடம்புகடோறும் மாறிமாறிப் பிறப்பிறப்புக்களைச் செய்து அலமருவதைக் கேட்டறிந் துளானாகையால், "எங்கணும் வீயாததல் என்,' என்றான். வீயாமை, நீங்காது அலமருதல், "மம்மர் செய்து அணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று, பொய்ம்மைசெய்போகபந்த போத்திருத்துவங்கள் பண்ணும்" (சிவ. சித். 11 : 86) என்றும், சலமாரும் பிறப்பிறப்பில் தங்கி இத்தரை கீழ்மேலும், நிலையாத கொள்ளி வட்டம் கறங்கென நிமிடத்தின்கண், அலமாரும்" (சிவ. சித். 11 : 88) என்றும் கூறுவனவற்றால் இவ்வுண்மை துணியப்படும். அனாதியே மூல மலத்தால் கட்டுற்றுக்கிடக்கும் ஆன்மா, மீட்டும் "தத்துவத்து உலைவில்கட்டு" எய்துவதற் குரிய காரணத்தைக் காண்பான், கட்டுற்றுக்கிடக்கும் ஒன்றனை அதனினின்றும் நீக்குவார், அதற்குப்பிறிதொரு கட்டினை உளதாக்குதல் இல்லையென்னும் நூலவறிவிற்கு அக்கட்டு இயைந்ததாகத் தோன்றுமை கண்டு, "ஆய்வின் வாரா அளவைத்து" (5) என்றார்.

ஆன்மாவைப்பற்றி நிற்கும் ஆணவக்கட்டை நீக்கி, அதற்கு வீடுபேறு உதவுதல் குறித்து இத்தத்துவக்கட்டுப் புணர்க்கப் படுவதாயிற்றென்பார், முதற்கண், "வீடுற விரவிய பந்தம்" (6) என்றார். இதனை,

"எல்லாமாய்த் தத்துவங்கள் இயைந்ததென் அணுவுக் கென்னில்
தொல்லாய கன்மமெல்லாம் துய்ப்பித்துத் துடைத்தற்கும், பின்

நில்லாமை முற்றுவித்து நீக்கவும், கூடிநின்ற
பொல்லாத ஆணவத்தைப் போக்கவும் புகுந்ததன்றே"
(சிவ. சித். 11 : 79)

எனச்சான்றோர் கூறியவாற்றானும் அறியலாம். பின்னர்த் (6) "துய்த்தல் செல்லான்" (5) என இயையும். இது மாணவனது நூலவறிவிற்குப் புலனாகாமைகண்டு, எதிர்மறை முகத்தால் விளக்குவார். ஆணவ நீக்கம்வேண்டிய ஆன்மா அதுகுறித்து விரவிய தேகசம்பந்தம் பெறுனுயின், அது நீங்குமாறு இல்லை யென்பது எய்த "விரவிய பந்தம் கூடாதோடின்" (6-7) என்றார். கலை முதலாக நிலம் ஈறாகக்கூறிய முப்பத்தொரு தத்துவங்களும்விரவித் தேகமும் போகமும் ஆதலின், அவை ஆன்மாவொடு தொடக்குறும் தொடர்பை "விரவிய பந்தம்" என்கின்றார். "பந்தமும் வீடுமாய பத பதார்த்தங் கள்" (சிவ. சித், 1 : 44) என்றும், "பிணிப்படும் உடம்பை விட்டு இறக்குமாறு காட்டினுய்க்கு" (ஞான. தேவா.) என் றும், "துறக்கப்படாத உடலைத் துறந்து" (நாவு : தேவா) என்றும் சான்றோர் தேக சம்பந்தத்தின் இயல்பை விளக்கிய காண்க. கூடாதோடின் எனவே, ஓடுதல் இல்லையென்பது துணிபாம். இத்தேகமும் வீடு பேற்றுக்குக் கருவியா யிருக் கும் உண்மையை நம் நாவரசப் பெருந்தகை, "எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" எனவும், சேக்கிழார் சுவாமிகள், "திருத் தொண்டத்தொகை முன் சொன்ன திருவாளன், வாசமலர் மென்கழல் வணங்கவந்த பிறப்பை வணங்குவாம்" எனவும் கூறியருளினமை ஈண்டுக்குறிக்கற் பாலவாம். நாவரசர் திரு வாக்கில் "காணப்பெற்றால்" என்பது காண்டற்குக் கருவி யென்பதை உட்கொண்டும், சேக்கிழார் திருவாக்கில், "வணங்க வந்த" என்பது வணங்குதலைக் குறிக் கோளாகக் கொண்ட பிறப்பு என்பதை உட்கொண்டும் நிற்கின்றன; வினையெச்சம்

எதிர்மறை கண்ணியதென்றும், பெயரெச்சம், காரணப் பொருட்டென்றும் கோடல் ஈண்டைக்கு எற்புடைத்தன்று.

அவ்வாறு பந்தம் கூடாதோடின், நுகர்ந்தாலன்றிக் கழிவுபெறுத—ஆன்மாவுக்கு நுகர் பொருளாய் எய்தும்—போகங்களைப் பின்பு அவ்வான்மா, நுகர்தல் இலனும் என்பார், "துலவிய போகம் பின்னர்த் துய்த்தல் செல்லான்" (8) என்றார். துய்த்தல் செல்லான் என்பது ஒரு சொல்லாய், துய்யான் என இன்மைப் பொருண்மை சுட்டிய எதிர்மறை முற்றுவினையாயிற்று; "கனவிற் கண்டது நனவின் எய்துதல், தேவர்க்காயினும் இசைதல் செல்லாது" (பெருங்கதை) எனக் கோங்கு வேளிர் கூறினாற்போல.

போகநுகர்ச்சி யில்லையாயின், அது காரணமாக வினைத் தொடர்பும், அதற்குக் காரணமாகிய மலமும் ஒழிதல் இல்லையென்பார், "எய்த்தல் இன்றும் இருவினை" (9) என்றார். எய்த்தல், இளைத்தல்; ஈண்டுக் கெடுதல் குறித்து நின்றது. எய்த்தல் இன்றெனவே, வினைத் தொடர்பு நீங்காது ஆன்மாவைப் பிணித்து நிற்கும் மலத்தொடு கிடந்து செவ்வி நோக்கி நிற்கும் என்றவாறும். "ஒளிப்பினும் வினைத் தொடர்பு ஊட்டாது கழியாது" என்பது பழமொழி. "வினைப்பகை வீயாது பின்சென்றடும்" என்பது திருவள்ளுவப் பயன். இருவினை என்புழி முற்றும்மை விகாரத்தால் தொக்கது. வினையால் ஆன்மாவுக்கு அறியாமை தோன்றி, அவ்வினைத் தொடர்பறுக்கும் நெறியுணர்த்தும் மெய்ஞ் ஞானத்தைத் தலைப்படாவாறு செய்தல் ஒருதலையாகலின், "அபவர்க்கம் உற்றடையான்" (10) என்றார். அபவர்க்கம், முத்தி. "வினையாயாலசத்து விளைதலால் ஞானம், வினைதீரினன்றி விளையாவாம்" என்பது சிவஞான போதம். இதனால், வீடு பேற்றிற்குத் தேகப்பேறும் வினைப்பயனுறுதலும் ஏதுவாதல் பெறப்பட்டது.

இனி, ஆணவக்கட்டினைப் போக்குதற்குப் பிறகட்டுகளை எய்துவிப்பதும் முறையே என்பதனை உலகியலில் வைத்து விளக்குவார், "உடை உறுகறை கடிதகற்றப் பிறகறை பிடித்த பெற்றியின்" (11 - 2) என்றார். கடிதகற்ற எனவே, ஆணவக் கட்டை விரைவில் நீக்கவேண்டுமென்பது பரமன் திருவருட் குறிப்பு என்பது பெற்றாம். பிறகறை, உவர்மண், சுண்ணம்பு முதலியன. ஆன்மாவைப் பிணித்துத் தனக்கு உறும் துன்பமனைத்தும் அது நுகருமாறு செய்து மறுவலும் தன்னையே காதலிக்கச் செய்யும் பெருமையுடையதாகலின், தேக சம்பந்தத்தை, "வான்பிணி" (12) என்றார். "இழத் தொறூம் காதலிக்கும் சூதேபோல் துன்பம், உழத்தொறூம் காதற்றுயிர்" (குறள். 940) எனச் சான்றோர் கூறுதல் காண்க. தேகம், அவாய்நிலை. இனி, வன்பிணியெனற்பாலது, நீண்டதெனக் கொண்டு "வலிய சரீரசம்பந்தம்" என்றுகூறு வர் பழையஉரைகாரர்.

இவ்வாறு, தேகசம்பந்தம் பெறுதற்குச் சமைந்த ஆன்மா, போக நுகர்ச்சி குறித்துத் தத்துவந்தோறும் சென்று துய்த் தல் ஒழிவின்றி நிகழ்தலால், "கலைமுதலாச் சொற்றரும்படி கடையாயவற்று ஒடியாது உலாவலின்" (13-4) என்றார். "கலை முதலாச் சொற்றரும்படி கடையாயவற்று" என்றது ஆசிரியர் கூற்று. ஒடிவின்றி எனற்பாலது செய்யுளாக லின், ஒடிவின்று என வந்தது; அடியிணை ஒடிவின்று பழிச்ச" (அக. 2 : 6) எனப் பிறூண்டும் கூறினர். ஆன்மா தனக்கொரு நுண்ணிய தேகமிலனுய வழி, அரு வும் உருவுமாகிய தத்துவ புவனந்தோறும் ஒடிவின்று லாவிப் போகம் நுகர்தல் கூடாமையாலும், அச்செலவு நுகர்ச்சிகட்குப் பருவுடம்பினனுதல் செல்லாமையாலும் "நுணங்கிய ஆகனுகி" (15) என்றும், அதுவும் மாயாகாரிய மாய், இவனை வினைத்தத்துவ பவன போகத்திடை மூழ்கு

வித்தவழி, இவன் அதுவதுவாய் அழுந்தி மயங்குதலின், "மாயையவயின்" (16) என்றும் கூறினர். ஆகி, வினைமுதன் மேனின்ற வினைப்பெயர். காரண வுருவால் ஆன்மாவை மோகிப்பித்தலும் காரிய வுருவால் பயன்படுதலு முடைய மாயை. ஆணவக்கட்டு அறும்வரையில் ஆன்மாவிற்குப் பந்தமாய், அற்று வீடுபேற்றுக்குச் சமைந்த வழித்திருவருளாய் உபகரிக்கும் சிறப்பு, பிறபதார்த்தங்கட்கு இன்மையின் மாயை "இணங்கிரிமாயை" எனப்பட்டது. இணங்கு, ஒப்பு. "இணங்கு மலைமகளோ டிருகூறொன் றாய் இசைந்தாரும்" (ஞான. தேவா.) எனவரும் திருவாக்காலும் இப்பொருண்மை உய்த்துணரப்படும். ஆன்மா நுண்ணுடம்பினன் என்றும், மாயாவுதரம் மரீஇயோன் என்றும் சான்றோர் கூறியது இக்கருத்துப் பற்றியென்பார், "என்பது அறி" (16-7) என்றார்.

அரியதவத்தை யுடையார்க்கன்றி ஏனையோர்க்கு இச் சைவநெறிக்கண் கருத்தும் ஆராய்ச்சியும் பிறவாமையின், "அருந்தவ" என்றும், அதனையுடையார் பெறும்பயன் சிவபோகமும், அழியாப் புகழுமாகலின், "ஆயாச்சீர்த்தி அருந்தவ" என விசேடித்தும் கூறினர். ஏனைப் போகங்களைத் துய்ப்பார் புகழெல்லாம், ஆய்ந்தவழி, அழிவனவாய பதபதார்த்தங்களையே தமக்கு ஆதாரமாகக் கொண்டிருத்தல் பெறப்படுதலால், அவை பொருள் சேர் புகழாகாமல் நலங்குறைதலின், அத்தகைய குறை சிறிதுமின்றுய சிவபோகப் பெரும் பெயர் ஆய்வார் அளவைக்கு அடங்காது பெருகுதலின், அதனை, "ஆயாச் சீர்த்தி" என்று சிறப்பித்தார். அருந்தவமுடையார்க்கே சைவநெறி கைகூடும் என்பது,

"வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமைதப்பித்
தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும்

ஊழ்பெறல் அரிது; சால உயர் சிவஞானத்தாலே
போழிளம தியினனைப் போற்றுவார் அருள்பெற்றாரே ''
(சிவ. சித். ii : 91)

என்றும்,

"...........................அருந்தவங்கள் புரிந்தும்,
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள்படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துச் சென்றால் சைவத்
திறத்தடைவர்..............=......'' (சிவ. சித்தி. viii - 33)

என்றும் சான்றோர் கூறியவாறு காண்க. இனி, சிவபோகப் பெரும் பெயரின் சீர்த்தி ஆய்வின் வாரா அளவைத்து என்பது,

"ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான்புகின் அளவில்லை; கிளக்கவேண்டா.'' (ஞான-தேவா)

என்ற திருவாக்காலும் இனிது உணரப்படும்.

இது காறும் கூறியவாற்றால், கேவலத்தில் ஆணவ சம்பந்த முற்றுக்கிடந்த ஆன்மாவுக்கு அது கெடுதற்பொருட்டே மாயாகாரியமாகிய தேகசம்பந்தம் உண்டாயிற்று என்பதும், அதனால் ஆன்மா, தேகத்திடத்தனாய் ஆங்கு நுகர்தற்குரியவற்றை நுகர்ந்து ஆணவக்கேடு பெற்றுத்திகழ்தற்குச் சமையுங்கால், அம்மாயாகாரியங்களிலே போக்கு வரவு செய்வானுயினான் என்பதும் கூறியவாறாம்.

திருத்தவத்துறை

[தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர்,
மு. இராகவையங்கார்]

திருச்சிராப்பள்ளிக்கு வடகிழக்காக 13 மைலில் லால்குடி என்ற ஊரொன்று உள்ளதைப் பலரும் அறிவர். இது ரெயில்வே ஸ்டேஷனாகவும், தாலூகாவின் தலைமை ஸ்தானமாகவும், மழநாட்டுப் பிரகசரணம் என்ற வகுப்பைச் சார்ந்த ஸ்மார்த்தப்பிராமணர் மிகுதியும் வசிப்பதாகவும் உள்ள பேரூர். இவ்வூரிற் புராதன சிற்பத்திறம் வாய்ந்த சிவாலயமொன்று உண்டு. இக்கோயிலின் செந்நிறமான கோபுரத் தோற்றத்தைக் கொண்டு 'சிவப்பு ஸ்தானம்' என்ற பொருளுடைய 'லால்குடி' என்ற பெயரை இதற்கு முகம்மதியர் வழங்கினர் என்பர்.[1] இவ்வூர்ச் சிவாலயத்தின் கிழக்கு வடக்குத் திருமதில்களில் 9-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சிபுரிந்த அரசர்கள் காலத்துச் சாஸனங்கள் பல வரையப்பட்டுள்ளன. இவற்றின் குறிப்பை 1928-29 ஆண்டுச் சாஸன விலாகா அறிக்கை யிதழ்களில் 98 முதல் 140 வரையுள்ள எண் வரிசையிற் காணலாம். இவற்றினின்று இவ்வூரின் பழம்பெயர் திருத்தவத்துறை என்பது அறியப்படும். இதுவே பிற்காலத்தும் வழங்கப் பெற்றதென்பதும், இதற்குத் தமிழ்ப்புராணமொன்று உண்டென்பதும் தெரியவருகின்றன.[2] இத்தலத்துச் சிவபிரான்,

---

1. Trichinopoly District Gazetteer ; see *Lalgudi*.
2. ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரம் ; முதற்பாகம், பக்கம் 94. இத்தலத்துத் தேவியான பெருந்திருப் பிராட்டியார் (ஸ்ரீமதி) மீது பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தமொன்று, ஷை பிள்ளையவர்களாற் பாடப்பெற்றுள்ளது. இது பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டில் வெளிவந்துள்ளது.

திருத்தவத்துறைப் பெருமானடிகள்
,, பட்டாரகர், படாரகர்
,, ஈசுவர பட்டாரகர்
,, உடையார்
,, மகாதேவர்

என வழங்கப்பெற்றனர் என்று முற்கூறிய சாஸனங்களினின்று உணரலாகும். இக்கோயில் மூர்த்திக்கு இக்காலத்து வழங்குந் திருநாமம் ஸப்தருஷீசுவரர் என்பது. தம்மை நோக்கித் தவஞ் செய்த அத்திரி பிருகு முதலிய ஸப்தருஷிகட்கும் அருள்புரிந்தமையால், அம்மூர்த்திக்கு இத்திருநாமம் அமைவதாயிற்று. 9-ஆம் நூற்றாண்டினரான முதல் வரகுணபாண்டியனும், தெள்ளாறெறிந்த நந்திவர்ம பல்லவனும், 10-ஆம் நூற்றாண்டினரான பரகேசரி பராந்தக சோழன், இராஜகேசரி என்பார்களும், இவர் வழியினரான வேந்தர்களும் பெரிதும் அபிமானித்துத் திருப்பணிகள் புரிந்த இத் திருத்தவத்துறையானது புராணப் பிரசித்தி பெற்றதென்பதைப் பலரும் அறிந்திருத்தல் கூடியதே. ஆனால், இது தேவாரப் பாடலும் பெற்றது என்ற செய்தியை இதுவரை எவருங் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவில்லை. அதனால் புராண ஸ்தலங்களுள் ஒன்றே இத்திருத்தவத்துறை என்று நம்மவர் கருதல் இயல்பேயாம். ஆனால் உண்மை அன்னதன்று என்பது ஆராய்ச்சியால் நன்கு விளங்குதலின், அதனைத் தமிழ்மக்க ளறிய விரும்பி இஃது எழுதப்படுகின்றது.

தேவாரம் அருளிய மூவரால் தனிப்பதிகம் உடையவாகப் பாடப்பெறாது போயினும், அத் தனிப் பதிகங்களினும் பொதுப் பதிகங்களினும் குறிப்பிடப்பட்ட சிவதலங்கள் பலவுண்டு. அவை வைப்புத் தலங்கள் என்று வழங்கப்பெறும். அத் தலங்களிற் பலவற்றை 'க்ஷேத்திரக்கோவை'

என்று தலைப்பிடப் பெற்றதும் திருநாவுக்கரசு நாயனாராற் பாடப்பட்டதுமான பொதுப் பதிகத்துங் காணலாம். அதன் 11-ஆம் பாசுரத்தே,

"பண்டெழுவர் தவத்துறை வெண்டுறை"

என வருந் தொடர் இங்கே குறிப்பிடத்தக்கது. லால்குடிக்குத் தவத்துறை என்ற பெயர் வழக்குப் பழமையாகவே உண்டென்பது தெரியாமையாலும், அதனால் மேற்காட்டிய தொடரி லுள்ள தவத்துறை என்பதை 'வெண்டுறை'[1] என்றதற்கு விசேடணமாக்கி 'எழுவர் தவத்து உறை வெண்டுறை' என்று பிரித்துப் பொருள் கொண்டதனாலும் அத்தவத்துறை என்ற தொடர்மொழி ஒருதலத்தைக் குறிப்பதாகப்பெரும்பாலாராற் கருதப்படவில்லை போலும். ஆனால், அப்பர் சுவாமிகள் கூறிய தவத்துறை என்பது தனிப்பட்ட ஒரு தலமேயன்றிப் பிறிதன்று. 'பண்டெழுவர் தவத்துறை' என்பதற்கு, ஆதியில் எழுவர் தவஞ் செய்த துறை என்பது பொருளாகும். தவஞ் செய்த துறை என்றதனால் முன்னின்ற எழுவர் என்பார் முனிவர்கள் என்பதும், பண்டெழுவர் என்பதனால் அவர்கள் ஆதியிருடிகள் என்பதும் பெறப்படும். படவே, ஸப்த ருஷிகளே அவ்வெழுவர் என்பதும், அவர்கள் சிவபிரானை நோக்கித் தவஞ் செய்து பேறு பெற்ற தலமாதல் பற்றித் தவத்துறை என்ற பெயர் வழங்கலாயிற்று என்பதும், அவ்வெழுவர்க்கும் அருள்புரிந்த ஸப்தருஷீசுவரர் கோயில்கொண்ட லால்குடியே அத்தலமென்பதும் நன்கு விளங்கின. எனவே, திருத்தவத்துறை, தேவாரத்துள் குறிப்பிடப்பட்ட தலங்களுள் ஒன்றென்பது தெளியப்படும்.

மேற்கூறியவாறு, திருத்தவத்துறை வைப்புத் தலமென்று விளங்கிற்றாயினும், அது தனிப்பதிகம் பெற்ற தலங்களுள் ஒன்றென்பது, இப்போது வெளிவந்துள்ள தேவாரப் பதிகங்களைக் கொண்டு அறியக்கூடவில்லை. எனினும் அங்ஙனம் பதிகம்பெற்ற சிறப்பையும் இத்தவத்துறை

1. வெண்டுறை - சம்பந்த சுவாமிகள் தேவாரம் பெற்ற சோணாட்டுத்தலம். திருவண்டுதுறை என வழங்கும்.

ஒரு காலத்து உடைத்தாயிருந்த தென்றே தெரிய வருகின்றது. திருஞானசம்பந்த சுவாமிகள் தலயாத்திரை செய்து சிவபிரானை வணங்கி வந்ததைக் கூறுமிடத்துப் புலவர் பெருமானுன சேக்கிழார்,

> " ஆரணத் துட்பொரு ளாயினுரை
> யானைக்கா வின்கட் புகழ்ந்துபாடி
> ஏரணி யும்பொழில் சூழ்ந்த சண்பை
> யேந்தலா ரெல்லையி லின்பமுற்ருர்."

> " கைதொழு தேத்திப் புறத்தணைந்து
> காமர் பதியதன் கட்சிலநாள்
> வைகி வணங்கி மகிழ்ந்தணைவார்
> மன்னுந் தவத்துறை வானவர்தாள்
> எய்தி யிறைஞ்சி யெழுந்து நின்றே
> யின் றமிழ்மாலை கொண்டேத்திப் போந்து
> வைதிக மாமணி யம்மருங்கு
> மற்றுள்ள தானம் வழுத்திச் செல்வார்."

(பெரிய புரா - திருஞான - 346, 347.)

என்று அந்நாயனுர் செய்திகளாகப் பாடுதல் காணலாம். திருவானைக்காவிற் சிலநாள் வைகி வணங்கியபின் வேறு தலங்களையுந் தரிசிக்க விரும்பிய அப்பெரியார், அடுத்துச் சென்றிறைஞ்சியது 'தவத்துறை வானவர்தாள்' என்று இப்பாடல்களில் கூறப்படுதல் அறியத் தகும். இத் தவத்துறையாகிய லால்குடி திருவானைக்காவுக்கு வடகிழக்கே 12 மைலில் உள்ளதனுல், 'தவத்துறை வானவர்' என்பார் அத்தலத்துக் கோயில் கொண்ட ஸப்தருஷீசுவரரே என்பது தானே விளங்கும். இங்ஙனம் சம்பந்தமூர்த்திகள் தவத்துறை வானவர் தாளை வணங்கியது மட்டுமன்றி,

> " இறைஞ்சி யெழுந்து நின்றே
> யின்றமிழ்மாலை கொண்டேத்தி"னர்

என்றும் சேக்கிழார் பாடுகின்ருர். இதனுல், தம் திருப்பதிக மாலை யொன்றும் அவ்வானவர் தாளிற் சூட்டி அந்நாயனுர் துதித்தனர் என்பது நன்கு பெறப்படும்.

> " பைஞ்ஞீலி வாணர் கழல்பணிந்து மண்பரவுந்
> தமிழ்மாலை பாடி" (ஷை ஷை 322)

"ஆனைக்காவில் வெண்ணாவல் மேவிய மெய்ப்பொருளைப்
பண்ணுறு செந்தமிழ்மாலை பாடி" (345)

"நெடுங்களத்தாதியை இன்னிசை மாலைகொண்
டேத்தி யேகி" (349)

என்பன முதலாகப் பிறதலங்கட்குச் சம்பந்தமூர்த்திகள் திருப்பதிகங்கள் பாடியதைக் குறிப்பிடுந் தொடரே அமைய, தவத்துறை வானவர்க்கும் அந்நாயனார் பதிகம் பாடிய செய்தியைச் சேக்கிழார் கூறுதலால், அது வைப்புத்தலமன்றிச் சம்பந்தமூர்த்திகளது தனிப்பதிகம் பெற்றதென்பது தெரிய வருகின்றது. இதனை அடியில்வரும் சாஸனப் பிரமாணங்களும் வலியுறுத்துதலைக் கூறுவேன்.

மேற்குறித்த லால்குடிச் சிவாலயத்தின் தெற்குத்திரு மதிலில் வரையப்பட்ட கல்லெழுத்துக்களிலே, மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மன் (முதற் பராந்தகசோழன்) காலத்தமைந்தவற்றுள் அவ்வரசனது 37-ஆம் ஆட்சி யாண்டிற் பொறிக்கப்பட்ட சாஸனமும் ஒன்றாகும். அதனில், சிவகோசரி[1] பிடாரன் என்பார் திருத்தவத்துறைப் பட்டாரகர் (ஸ்வாமி) திருமுன்பு நித்தம் மூன்று காலமும் பிராமணரிருவர் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய நிலம் உதவிய செய்தி கூறப்பட்டுளது. அப்பராந்தகன் மகன் இராஜகேசரியின் மூன்றாம் ஆட்சியாண்டில் ஷை திருமதிலில் வரையப்பட்ட மற்றொரு சாஸனத்தே, அங்ஙனம் திருப்பதியம் பாடுதற்கு உதவிய மானியம் போதியதா யில்லாமையால் அஃதுதவிய சிவகோசரி பிடாரரே மேலும் சில நிலங்களை விலைக்குப் பெற்று உதவி, அதன் செவ்வாரத்தை (மேல்வாரத்தை)த் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வார் அடைதற்கும் பிறவற்றுக்குமாக வகை செய்த வரலாறு கூறப்பட்டுள்ளது. இவற்றால் தேவாரவாசிரியர் மூவர் பிரபாவங்களை முதன் முதலில் உலகிற் பரவச் செய்த முதல் இராஜராஜ சோழன் கொட்பாட்டனும் பாட்டனுமான சோழர்கள் காலக்

[1] கண்ணப்ப நாயனார் காலத்தே திருக்காளத்தி நாதரைப் பூசித்து வந்த அருச்சகர் பெயர் இதுவென்பது அறியத்தக்கது. பிடாரன் - பட்டாரகன் என்பதன் மரூஉ.

களிலே, திருத்தவத்துறைக் கோயிலில் திருப்பதியம் ஓதப்பட்டு வந்ததென்பது வெளியாதல் காண்க. இங்ஙனம் ஓதப்பட்ட திருப்பதியம், சேக்கிழார் குறிப்பிட்டவாறு, சம்பந்த மூர்த்திகளது "இன்றமிழ்மாலை"யே ஆதல்வேண்டும் என்று கொள்ளத் தடையில்லை. முதல் இராஜராஜசோழனே திருமுறை கண்டவனென்று பெரும்பாலும் கூறப்படுபவனாயினும், அவற்கு முற்பட்ட சோழராட்சிகளில் பழைய தலங்களிலெல்லாம் திருப்பதிகம் ஓதும் வழக்கிருந்ததென்பது சாஸனங்களால் நன்கறியப்படுகின்றது. 8-ஆம் நூற்றுண்டினனான பல்லவமல்லன் காலத்தே திருவல்லத்தும்,[1] 10-ஆம் நூற்றுண்டினரான முதல்இராஜகேசரி அவன்மகன் முதற்பராந்தகன் காலங்களில்பழுவூர்[2] அள்ளூர்களிலும்,[3] 11-ஆம் நூற்றுண்டினரான இரண்டாம் பரகேசரி, உத்தமசோழன் காலங்களில் முறையே திருவாவடுதுறை[4] அந்துவநல்லூர்த் திருவாலந்துறைகளிலும்[5] திருப்பதிகங்கள் ஓதப்பட்டு வந்த செய்தியை அவை கூறுதல் காணலாம். தேவாரம் பாடியமூவரின் வரலாறுகளும் பதிகங்களும் நாட்டிற் சிறுக அறியப்பட்டிருந்தவற்றை அவ் விராஜராஜசோழன் பிரபலமடையச் செய்தவன் என்பது தகுமேயன்றி, அச்சோழனுக்கு முன்பு அவை முழுதும் வழக்கற்றிருந்தன எனல் பொருந்தாததாகும். ஆகவே, அச்சோழனுக்கு முற்பட்டகாலத்துச் சாஸனங்கள் கூறும் திருப்பதியங்கள் பெரும் பாலவும் மூவரோதியன என்று கொள்ளுதலே ஏற்புடையது. அம்முறையில் இராஜராஜ சோழனுடையகொட்பாட்டன், பாட்டன் காலங்களில், திருத்தவத்துறைக்குரிய திருப்பதியமாகச் சாஸனங் கூறுவது, சேக்கிழார் கூறியபடி, அத்தலத்துக்கு ஞானசம்பந்த சுவாமிகள் பாடிய திருப்பதிகமாகவேகொள்ளல்பொருத்தமாதல் காண்க. பிராமணரிருவர் திருத்தவத்துறைப் பதியமோத நியமிக்கப்

1. S. I. I. VOl. iii, bb. 92-4.
2. A. R. NO. 349 of 1918.
3. Ibid ,, 373 of 1903.
4. Ibid ,, 139 of 1925.
5. S. I. I. iii, b. 139.

பெற்றனர் என்ற அரிய செய்தியும் இங்கே சிந்திக்கத்தக்கது. சம்பந்தர் அருளிய தவத்துறைப் பதிகம் சேக்கிழார் காலத்தும் வழங்கியதுபோலும். இல்லையேல் அப்பதிக முண்மையைச் சாஸனமூலம் அறிந்து "தவத்துறை வானவர்தாள் இன்றமிழ்மாலை கொண்டேத்தி" என்று அப்புலவர் பெருந்தகை கூறினர் எனல் வேண்டும். சோழனது பேரமைச்சராக விளங்கிய சேக்கிழார்க்குத்தேவாரம்பெற்ற தலங்களின் வரலாறுகள் மூலசாஸனவாயிலாக நன்கு தெரிந்திருத்தல் கூடியதேயாதலால் தவத்துறைக்குரிய அத்தகைய பிரமாணங்களைக் கொண்டே அங்ஙனம் அவர் பாடலாயினர் என்ற கருத்தும் பொருத்தமாதல் காண்க.

இனி, சம்பந்த மூர்த்திகள் பாடியபாடற்றொகை 16,000 என்பது நம்பியாண்டார் நம்பிகள் வாக்காலும்,[1] அவற்றுள் 384-பதிகங்களே பிற்காலத்து வழங்கலாயின என்பது உமாபதி சிவாசாரியர் வாக்காலும்[2] அறியப்பட்டவை. இப்போது வழக்கிலுள்ளவை 383 பதிகங்களே. விடுபட்ட ஒன்று, இன்ன திருப்பதிக்குரியதென்பது தெரியவில்லை. திருவிடைவாய் என்ற தலத்துக்குச் சம்பந்தமூர்த்திகள் பதிகமொன்றுண்டென்பது, பதிகப் பாடல்களமைந்த அவ்வூர்க்கல்வெட்டொன்றால் அறியப்படுகின்றது. இக்கல்லெழுத்து 12, 13-ஆம் நூற்றாண்டுகட்குரியதென்பார். இப்பதிகமே உமாபதி சிவாசாரியார் கூறிய கணக்கிற் குரியதென்று கருதப்படுகிறது. ஆயின், திருவிடைவாய்க்குச் சம்பந்தமூர்த்திகள் திருப்பதிகம் பாடிய செய்தியைச் சேக்கிழார் ஏனைத் தலங்களுக்குக் கூறியபடியே குறிப்பிடாது, திருத்தவத் துறைக்கு அம்மூர்த்திகளது பதிகமுண்மையைக் கூறுதல் நோக்கத்தக்கது.

---

1. "பச்சைப் பதிகத்துடன்பதினாறாயிரம்பா, வித்துப்பொருளை விளக்க வலபெருமான்" (ஆளுடை. திருத்தொகை). 16,000 பதிகமென்பாருமுளர்.

2. திருமுறைகண்ட புராணம், 25

இனி, 14-ம் நூற்றாண்டில் தேவராய மகாராயர் என்ற விஜயநகர வேந்தர் காலத்தும் லால்குடிக்குத் திருத்தவத் துறை என்ற பெயர்வழக்குப் பிரபலமாயிருந்த தென்பது அத்தலத்துள்ள சாஸனமொன்றால் அறியப்படுகின்றது. ஏறக்குறைய இவ்விராயர் காலத்தவரான அருணகிரிநாதரும் இத்தவத்துறையைத் தம் திருப்புகழில்,

“சீரணி யுந்திரை தத்து முத்தெறி
காவிரி யின்கரை யொத்து மெத்திய
சீர் புனைகின்ற திருந்தவத்துறை வரும்வாழ்வே”

“திரைக் கடற்பொரு காவிரி மாநதி
பெருக்கெ டுத்துமே பாய்வள நீர்பொலி
திருந்தவத்துறை மாநகர் தானுறை பெருமாளே”

என்று சிறப்பிப்பர். இத் திருத்தவத்துறைச் சாஸனங்களால் அறியப்படும் வேறு செய்திகள் வருமாறு:—இத்தலம் வட கரைமழநாடு என்ற பெரும்பிரிவைச் சார்ந்ததாகும். இம்மழ நாடு, 9-ம் நூற்றாண்டுகளிற் பாண்டியராட்சிக்குட்பட்டிருந்த காலத்துப் பாண்டியகுலபதி வளநாடு என்றும், சோழராட்சி யில் பாண்டிய குலசனிவளநாடு இராஜராஜ வளநாடு என்றும் பெயர் பெறலாயிற்று. இம்மழ நாட்டுள் இடை யாற்றுநாடு என்ற சிறு பகுதிக்கு உள்ளடங்கியதே இத் திருத்தவத்துறை. இத்தலத்துள்ள சிவாலயத்தைப் பல்லவ பாண்டிய சோழர்களும், பிற்பட்ட வேந்தர்களும் பிறநன் மக்களும் பெரிதும் அபிமானித்துப் பல திருப்பணிகளும் புரிந்துள்ளார். இவருள், பிற்பட்ட பாரத வெண்பாப் பாடுவித்தவனும் நந்திக்கலம்பகத் தலைவனுமான ‘தெள்ளா றெறிந்து வென்றுகொண்ட’ நந்திபோத்தரையனும், மாறஞ் சடையனான வரகுண மகாராஜனும், முதல் ஆதித்த சோழன் அவன்மகன் பராந்தகசோழன் என்பாரும் பழைமைபெருமை வாய்ந்தவர்கள். இவருள் முதலிருவரின் ஆட்சியாண்டுகளா கக் குறிக்கப்பட்டவற்றினின்று, முதல் வரகுணபாண்டியன் ஆட்சி தொடங்கிய காலத்தை ஒருபடியாகத் தெரிந்து

கொள்ள இடமுண்டு.* இம்மாறஞ் சடையற்குப் 'பாண்டியர் குலபதி' என்ற சிறப்புப் பெயரைச் சாஸனம் வழங்குதல் குறிப்பிடத் தக்கதாம். மழநாடு இவன் காலத்து அடிப்படுத் தப்பட்டமையால் அது 'பாண்டிய குலபதி வளநாடு' என்ற பெயர்பெற்றதென்று இவன் சிறப்புப் பெயரால் பெறப்படும். இதனைச் சோழர், பாண்டியரை வென்று கைப்பற்றியபின் பாண்டிய குலாசனி வளநாடு எனத் தம் சிறப்புப் பெயரை வழங்கலாயினர் [பாண்டிய குலாசனி - பாண்டியர் குலத் துக்கு இடியேறுன சோழர்]. மேற்கூறிய பேராசர் சாஸ னங்களிற் பல, தவத்துறைக்கோயில் புதுப்பிக்கப்பட்ட 10-ஆம் நூற்றுண்டில் வடக்குத் திருமதிலில் ஒருசேரப் பெயர்த்தெழுதப்பட்டன என்று தெரியவருகின்றது. இவற் ருல் லால் குடியாகிய திருத்தவத்துறை தேவாரப் பாடல் பெற்ற சிவதலமென்பதும், அதன் பழைமை பெருமைக ளும் நன்கு வெளியாகின்றன.

சிலப்பதிகாரமும் சமயங்களும்†

[G. கல்யாணம் பி. ஏ.]

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சிலப்பதிகாரம் என்னும் நூலைத் தமிழ் உலகுக்களித்த வள்ளல் இளங் கோவடிகளாவர். அன்னுர் அந்நூலின்கண் ஆங்காங்கே சைவம், வைணவம், சமணம், சாக்கியம் என்ற சமயங்களைப் பற்றிக் கூறியிருக்கின்றனர். அந் நான்கு சமயங்களுமே சிலப்பதிகார காலத்தில் நிலைபெற்றிருந்தன. அவைகளில்

*ஸ்ரீமான் கே. வி. சுப்பிரமணிய ஐயரவர்கள் (பி. ஏ.) இச்சாஸ னங்கள்பற்றி எழுதிய அரிய கட்டுரை காண்க (Ed. Ind. Vol. xx. p. 51).

†சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. R. P. சேதுப்பிள்ளையவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவிஎழுதி யது.

சைவம், வைணவம் என்ற இரண்டைப்பற்றி மாத்திரம் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தொல்காப்பியனார்,

"மாயோன் மேயகாடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"

என்று நிலத்தை நான்குபகுதிகளாகப் பிரித்துத் தெய்வம் முதலியவைகளைக் கூறினார். இதனால் முல்லைக்குத்திருமாலும், குறிஞ்சிக்கு முருகப்பெருமானும், மருதத்திற்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும் தெய்வங்கள் என்பது பெற்றாம். இம்முறைபற்றிச் சிலப்பதிகாரத்தில் கூறப்படுபவைகளைச் சிறிது ஆராயலாம்.

திருமால் :—திருவரங்கம், திருவேங்கடம் என்பன சிறந்த வைணவத்தலங்களாகக் கூறப்பெற்றிருக்கின்றன. காடுகாண்காதையில் மாங்காட்டு மறையவன் நாடுகாடுகள் எல்லாம் அலைந்துவந்து திருமால் திருவரங்கத்தில்கிடந்த கோலமும், திருவேங்கடத்தில் நின்ற வண்ணமும் கூறுவதை நோக்கில் அச்சமயவாதியே போல் பேசுகின்றான். நீலமேகம் நோராக நில்லாமல் நெடும் பொற்குன்றத்துப்படிந்ததுபோல் திருவரங்கத்தில் திருமால் கிடந்தவண்ணமும் என்றும், வீங்குநீரருவி வேங்கடமென்னும் ஓங்குயர் மலையத்துச்சி மீமிசை நன்னிறமேக நின்றது போல செங்கணெடியோன் நின்ற கோலமும் என்றுகூறும் மொழிகள் கூர்ந்து கவனிக்கத்தக்கன. திருவரங்கம், துருத்தி அல்லது இரண்டு ஆற்றிடைக்குறை என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் திருமாலைப்பற்றி ஆய்ச்சியர் குரவையில் சொல்லப்பட்டிருக்கிறது. இடைக்குலமாதான மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாக வைத்துவிட்டு சிலம்புவிற்கச் சென்றான் கோவலன். சென்றவன் மீண்டானில்லை. பொற்கொல்லன் சூழ்ச்சியாலும் பாண்டியன் ஏவலாலும் கொல்லப்பட்டான். அப்பொழுது ஆயர் சேரியில் சில அபசகுனங்கள் தோன்றுகின்றன. பிரையிட்ட தாழிகளில் பால் தோய

வில்லை; வெண்ணெய் உருகவில்லை; எருதுகளின் கண்கள் நீர் உகுக்காநின்றன; கன்றுகள் துள்ளிவிளையாடாமல் குழைந்து விழுந்துகிடந்தன; பசுத்திரள் மெய்ந்நடுங்கி அரற்றின; அவற்றின் கழுத்திலுள்ள மணிகள் இற்றுவீழ்ந்தன. இவைகளைக் கண்ட மாதிரி உற்பாதங்களுக்கு உபசாந்தியாகக் குரவைக் கூத்தாடலாம் என்கின்றாள். அக்கூத்தில் குரவைமகளிர் மாயோனைப் போற்றும் பாடல்கள் பொன்னேபோல் போற்றத்தக்கன. முக்கியமாக மூன்றுபாடல் குறிக்கத்தக்கவை. அவை, "மூவுலகுமீரடியால்" என்றும், "பெரியவனைமாயவனை" என்றும், "மடந்தாழு நெஞ்சத்து" என்றுந் தொடங்குவன.

முருகன்: சேயோன், செவ்வேள் என்று கூறப்படுவான். குன்றக் குரவையில் முருகனைவழிபட்ட பான்மை காணலாம். எங்கெங்கே முருகன் தங்கியருளிய இடம் என்பதைக் குறவர் வாயிலாகக் கேட்கலாம். "சீர்கெழு செந்திலும், செங்கோடும், வெண் குன்றும், ஏரகமும் நீங்கா இறைவன்" என்று கூறப்பட்டிருக்கிறது. 'வெறியாட்டயர்தல்' என்பது ஒரு வழிபாட்டுமுறை. நானில தெய்வங்களும் அங்கங்கேயே அடைந்து கிடந்தன என்று எண்ண வேண்டாம். சிறப்பாக அந்நிலத்திற்குரியார் வழிபட்டாலும், பொதுவாக எல்லோருமே வழிபட்டனர். முருகன் குறிஞ்சி (மலை) நிலத் தெய்வமாயினும் கடல் சார்ந்த தலமான செந்திலில்வைத்து வணங்கப்பட்டான், திருமால் முல்லை (காடு) நிலத்தெய்வமென்றாலும் வேங்கடமாகிய குறிஞ்சி (மலை) நிலத்தில் வைத்துப் போற்றப்பட்டான். இன்னும் புகார் நகரமான மருத நிலத்தில் எல்லாத் தெய்வங்களுக்குமே கோயிலமைத்து வழிபட்டிருப்பதைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இந்திரன்:—தமிழ் நாட்டில் இப்பொழுது சிறப்பாக யாண்டேனும் இந்திரன் கோயில் இருப்பதாகத்தெரியவில்லை. ஏதோ மறைவாகச் சில இருக்கலாம். நாட்டிற்கு இந்திரவழிபாடு இன்றியமையாதது. மழை பொழிந்து நாட்டுவளஞ் சுரக்க அவன் வழிபாடு வேண்டற்பாலது. "விசும்பிற்றுளி வீழினல்லான் பசும்புற்றலை காண்பரிது" என்பது வள்ளுவர் வாய்மொழி. பசியும், பிணியும், பகையும் போகவேண்டு

மென்றால் இந்திர வழிபாடு முக்கியமானது. காவிரிப்பூம்பட்டினத்தில் அக்காலத்தில் இவ்விழாவைக் கொண்டாடினார்கள். சித்திரை மாதத்துச்சித்திரையில் தொடங்கி இருபத்தெட்டு நாள் நடந்தது. மணிமேகலையிலும், இவ்விழா கொண்டாட வேண்டும் என்று யானைமீதிருந்து பறையறையும் முறை கூறப்பட்டிருக்கிறது. ஆடல் பாடல்கள் இவ்விழாவில் சிறந்த அங்கங்களாகத் திகழ்ந்தன. சிவபெருமான் திரிபுரமெரிய ஆடிய கொடு கொட்டிக்கூத்தும், பாண்டரங்கக்கூத்தும், திருமால் கஞ்சன் வஞ்சங்கெட ஆடிய ஆடலும், அல்லியமும், குடக்கூத்தும், மல்லாடலும், முருகன் ஆடிய துடிக்கூத்தும், குடைக்கூத்தும், காமன் ஆடிய பேடிக்கூத்தும், அயிராணி ஆடிய கடையமும், காளி ஆடிய மரக்காலும் முதலிய பதினொரு கூத்துகள் கூறப்பெற்றிருக்கின்றன. இவ்விந்திர விழாவை மண்ணவரேயன்றி விண்ணவருங்கண்டு வியப்புற்றனர் என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. விழாவாற்றுப் படுத்த மறுநாள் உலாநாளாதலின் புகார்நகரினர் கடலாடுதற்குச்செல்வர் என்பதையும் கடலாடு காதையில் பரக்கக்காணலாம்.

வருணன்:—இத்தெய்வ வழிபாடு அதிகமாக இல்லை. ஆனால் இன்னும் சில தெய்வங்களைத் தமிழ் நாட்டினர் வழிபட்டனர். வீரர்கள் கொற்றவை என்னும் வெற்றித்தெய்வத்தை வணங்கினர். ஐயைகோட்டம் என்று சிலப்பதிகாரத்திற் கூறப்படுகிறது. 'கொற்றவை சிறுவ' என்று முருகப்பெருமானைக் கூறியிருப்பது சமயமாணவர் ஆராய வேண்டிய ஒரு பொருளாகும். கொற்றவையை மலையில் வைத்து வழிபட்டார்கள். சேரநாட்டரசர் அயிரை என்னும் மலையில் கொற்றவையை வழிபட்ட செய்தியைப் பதிற்றுப்பத்து என்னும் நூலில் காணலாம். இப்பொழுது அயிரை மலை என்பது மலையாள நாட்டில் ஐவர்மலை என்று பின் பஞ்சபாண்டவமலையாகி அதிலுள்ள கொற்றவை தெய்வம் திரௌபதியாக மாறிவிட்டது. தமிழ் நாட்டுத்தெய்வம் வடநாட்டு மன்னரின் மனைவியானது விந்தையினும் விந்தை! இன்னும் இந்திரனுடைய வச்சிராயுதம், வெள்ளையானை, கற்பகத்தரு,

வேல் முதலியனவும் கோயிலில் வைத்து வணங்கப்பெற்ற தாகத் தெரிகிறது. சூரிய சந்திராதிகளும் போற்றப்பெற்ற னர்.

இனி, சிவபெருமானைப்பற்றிச் சிலப்பதிகாரத்தில் காணப்படும் சில குறிப்புகளை நோக்குவோம். இளங்கோவடிகள் சமணசமயத் துறவி. அன்பிற்கும் அறிவிற்கும் பொருத்த மானது சமணம் என்று கண்டு அதைமேற்கொண்டார். "குணவாயில் கோட்டத்து அரசு துறந்திருந்து" என்ப தற்கு அடியார்க்கு நல்லார் குணவாயில் என்னும் ஊரி லுள்ள அருகன் கோயில் என்று உரை கூறுகிறார். கவி யரசான அடிகளின் உடன்பிறந்த புவியரசான சேரன் செங்குட்டுவன் அழுந்திய சைவப்பற்றுடையவன். இவனைப் பற்றிக் கூறும்போதெல்லாம் அடிகள், சிவபெருமான் அரு ளால் இருப்பவன், அரசாள்பவன் என்று கூறுகின்றார். "செஞ்சடைவான வனருளில் விளங்க வஞ்சித் தோன்றிய வானவ" எனவும், "ஆனேறூர்ந்தோன் அருளினிற்றோன்றி மாநிலம் விளக்கிய மன்னவ" எனவும்வரும்அடிகளைநோக்குக. செங்குட்டுவன் வடநாடு செல்லப் புறப்பட்டபொழுது சிவ பெருமான் கோயிலை வலம்வந்து இறைஞ்சாச் சென்னி இறைஞ்சினான். சிவனடியிற் சாற்றிய மாலையை வாங்கி முடி யில் தரித்துக்கொண்டான். திருமால் கோயிலின் மாலையைப் புயத்தில் வைத்துக்கொண்டான். இதனால் இவன் அழுத்த மான சைவன் என்பது பெறப்படுகிறதன்றோ!

தமிழ் நாட்டினர் சிவபெருமானை திணைத் தெய்வமாக வைக்க எண்ணவில்லையென்றே தெரிகிறது; திணை கடந்த தெய்வமாகவே கொண்டனர். இப்பொழுது சிந்துநதிப் பிர தேசத்தில் மகஞ்சோதோரா, ஹாரப்பா என்ற இடங்களில் அகழ்ந்தெடுத்தவைகளினின்றும் 5000 ஆண்டுகள் முன்பே சிவ வழிபாடு இமயம்முதல் குமரிவரை இருந்ததாக ஊகிக்க இடமிருக்கிறது. சிலப்பதிகாரத்தில் மூன்று காண்டங்களி லும் மூன்று தலைநகரங்களிலும் சிவபெருமான் கோயில் கொண்டிருப்பது கூறப்பட் டிருக்கின்றது. புகார் நகரில்

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்" இருந்தது என்று கூறியிருக்கிறது: சிவபெருமானுக்குப் பிறப்புமில்லை இறப்புமில்லை; ஆதியில்லை அந்தமில்லை என்று சைவர் கொண்ட கொள்கையை இது வலியுறுத்துகின்றதன்றோ ! மதுரையில் "நுதல்விழி நாட்டத் திறையோன் கோயில்" இருந்தது என்றதும், வஞ்சிமா நகரில் "நிலவுக்கதிர்முடித்த நீளிருஞ்சென்னி யுலகுபொதி யுருவத்துயர்ந்தோன்" கோயிலைச் செங்குட்டுவன் வலம் வந்தான் என்றும் கூறப் பெற்றிருப்பது காண்க. சிவபெருமானுக்கு இடத்திலும் முதன்மை கொடுத்துக் கூறியதன்றி தன்மையிலும் முதன்மை கொடுத்துக் கூறிய இளங்கோவடிகளின் பெருந்தன்மையை யாம் எவ்வாறு எடுத்துரைக்க வல்லேம். சமண சமயப் பெரியாரான அடிகள் காய்தல் உவத்தல் அகற்றி எவ்வெச் சமயத் தெய்வத்தைக் கூறும்போதும் அவ்வச் சமயவாதிகள் கூறும் திறமையை யாம் என்சொல்லி ஏத்துகேம். அத்தகைய ஆன்றோர் புகழ்ந்த, போற்றிய சைவசமயம் எப்பொழுதும் இந்நிலவுலகில் நிலவுவதாக.

" பெருந்தகைதன் பேருரு "

[K. கோவிந்தன்,
தமிழ் மாணவன், ஔவைத் தமிழகம், திருவத்திபுரம்]

" Lives of great men all remind us
We can make our lives sublime
And departing, leave behind us
Footprints on the sands of time ;—

" Footprints, that perhaps another,
Sailing o'er life's solemn main,
A forlorn and shipwrecked brother,
Seeing, shall take heart again."

—*H. W. Longfellow*

மேல் வரையப்பட்டுள்ள ஆங்கிலப் பொன் மொழிகளை ஊன்றி, ஊன்றி உள்ளுங்கள். உள்ளுவார் உள்ளத்தே என்ன நிகழ்கின்றது? ஓர் அரிய உணர்ச்சி உள்ளத்தைக் கவர்ந்து எழுகின்றது; தன்னளவில் நில்லாது மிக மிக ஓங்குகின்றது. அத்தகைய நிகழ்ச்சியை நிகழ்த்த அம்மொழிகள் என்ன கூறுகின்றன? பெரியார்களின் வாழ்க்கையின் மேன்மையினைக் கூறுகின்றன. பெரியார் யார்? செயற்கரிய செய்வார் பெரியர். பெரியார் வாழ்க்கை என்ன செய்கின்றது? நாமும் மாண்புடைய தோன்றிய அத்தகைய உயர் வாழ்வைப் பெறலாம் என்கின்றது. வாழ்க்கையாகிய, அச்சம் பொருந்திய கடலைக் கடக்கும் ஒருவன், கடுங்காற்றால், தோணியழிந்து திசையறியாது, திக்கற்றவனாய், விடப்பட ஞான்று, மக்கள் நடமாட்ட முண்மையினைக் காட்டும், அடிச்சுவட்டைக்

கண்டு மன திடம் கொள்ளும் நிலையில், தன் அடிச்சுவட்டைக் காலமாகிய மணலின்மீது பதிய வைத்துச் சென்றதும் அப் பெரியார்களின் வாழ்க்கையேயாம் என்கின்றது.

அத்தகைய பெரியார் பலர் வாழ்ந்தது இந்நாடு. இந்நாடு இன்று எந்நிலையில் உள்ளது? சீர்கெட்ட நிலையில் உள்ளது. காரணம் என்னை? பெரியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றா மையேயாம்.

அத்தகையபெரியாருள் நாவரசரும் ஒருவராவர். அவர்ஈண் டுப் பெருந்தகையெனக்குறிப்பிடப்பட்டுள்ளார். "நாவரசாகிய பெருந்தகையோய்!" என்று ஒரு பெரியார் விளித்தாராதலின் யானும் அவரைப் பெருந்தகையென்றே குறிப்பிடுகின்றேன். அவர் என்ன செய்தார்? செயற்கரிய செய்கைகள் பல செய் தார்; பொன் மொழிகள் பல வழங்கினர்; அறிவுரைகள் பல புகட்டினர்.

உள்ளங் கவரும் ஒரு பொருளைக் காண்கின்றோம். அத னைத் தனித் தனியே உற்று நோக்குகின்றோம். அதன் அருமையினை உள்ளுகின்றோம். இவ்வாறு உள்ள, உள்ள, அதனைச் செய்தான்பால் நாட்டம் செல்கின்றது. அவனைக் காண விழைகின்றோம். அது பற்றிப்பலரை வினவுகின்றோம். இறுதியில் அவனைக் காண்கிறோம், இறும்பூது கொள்ளுகின் றோம்.

இறையருளால் இயங்கப்பெறும் எண்ணில் கோடிப் பல் லுயிரெல்லாம், அறிவுடைமை கருதி அறுவகைப்படும் என் பர் ஆன்றோர். அவற்றுள், ஆறறிவும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற உயிரே மக்களுயிராகும். அத்தகைய மக்கள் உல கிடை வாழ்வதன் பயன் அறம், பொருள், இன்பம், வீடு என்ற இந் நான்கு உறுதிப்பொருள்களையும் பெறுதலேயாம். இறைவன் உவப்பதும் அதுவேயாம். அந்நெறியடைதற் பொருட்டு மக்கள் பன்னெறி கைக்கொள்ளுகின்றனர். ஆவேறு உருவின வாயினும், ஆபயந்த பால்வேறு உருவின அல்லவாதல் போல, அவர்கூறும் நெறிகள் பலவாயினும், அவற்றால் எய்தும் பேறு ஒன்றேயாம் என்க.

அப்பேற்றெய்தும், நெறிகள் பல கூறுகின்றார் நம் பெருந்தகை. அவற்றுள் ஏற்ற ஒன்றினைக் கடைப்பிடித்தலே நாம் செயற்பாலது. நாம் உலகிடைத் தோன்றியதன்பயனாக, நாம் செய்ய வேண்டிய தொண்டுகளைச் செய்தல் ஒன்றே அஃது அடையும் நெறியாம் என்கின்றார். "கோயிலான், தன்கடன் அடியேனையும் தாங்குதல், என்கடன் பணிசெய்து கிடப்பதே" (5 : 19 : 9) என்பதுகாண்க. ஈண்டு, தொண்டாவது உலகத்தொண்டு என்க. அவன் அடியை அன்புடன் உள்ளுதல் ஒன்றே துன்பத்தைப் போக்கும் நெறியாம் என்கிறார். "துன்பக் கடலிடைத் தோணித் தொழில்பூண்ட தொண்டர்தம்மை, இன்பக் கரைமுகந் தேற்றும் திறத்தன....காண்க ஐயாறன் அடித்தலமே." (4-92-6) என்பது காண்க. ஐந்தெழுத்தோதுதல் ஒன்றே அந்நிலைதரும் என்கின்றார். நமச்சிவாயப் பதிகம் காண்க. ஆணும் பெண்ணுமாக இயற்கையில் காணும் காட்சியே, கயிலைக் காட்சியாம்என்றும், இவ்வுலகமே கயிலையாம் என்றும் கூறுகிறார். "மாதர் பிறக்கண்ணியானை (4:3:1) முதலியன காண்க. இன்னும் அவர், அந்நெறி நின்றார் பிறர் அடிக்கீழ் வாழ்தலும், இயற்கை இன்னல் தமக்கஞ்சுதலும் செய்தல் வேண்டுவதிலர் என்கிறார். "நாமார்க்கும் குடியல்லோம்" (6 : 98 :1), "வானந்துளங்கில் என் (4 : 112: 8) முதலியன காண்க. இன்ன ஆறுகள் எண்ணில கூறியுள்ளார். இவ்வாறு கூறியும், எழுதியும், இருந்ததோடு அமையாது, செய்கையினும் காட்டியும் உள்ளார். அவர் தம் அடிச்சுவட்டை நாமும் பின்பற்றுவோமாயின், நாமும், அத்தகைய உயர் வாழ்வைப் பெறுவது திண்ணம்.

இத்தகைய அறவுரைகள் பல கேட்கின்றோம். நூல்களில் எழுதியதைக் காண்கின்றோம். இத்தகைய நன்னெறிகள் பல காட்டிய புண்ணியன்பால் உள்ளம் செல்கின்றது. அவனைக் காண விழைகின்றது. பல்லிடமும் நாடி நாடிப் பார்க்கின்றது. பல்லாண்டுகளுக்கு முன்னிருந்த அவரைக் காண இயலாது தயங்குகின்றது. அவர்தம் உருவத்தை ஓவியத்தின் மூலமாவது காண விழைகின்றது. அது கொண்டு

ஓவியக்காரர் இல்லந்தோறும் நுழைந்து நுழைந்து தேடுகின்றது. இறுதியில், ஓர் ஓவியக்காரர் தம், இல்லத்தில் நம் பெருந்தகை தன் பேருரு பல விளங்குவதைக் காண்கின்றது. அவற்றுள் ஒன்றை உற்றுநோக்குகின்றது. பொன்னிறங் கலந்த வெள்ளொளி வீசுகின்றது. கூர்ந்து நோக்கப் பொன்னொத்த மேனியும் அதன்மீது தூய வெண்ணீறும் தோன்றுகின்றன. கண்டத்தில், உருத்திராக்க மாலையொன்று தொங்குகின்றது. நாயகன் சேவடி பதிந்த உள்ளம் முகத்தின் வழியாகத் தோன்றுகின்றது. அடுத்தது காட்டும் பளிங்கே போல், உள்ள நிகழ்ச்சியை முகம் காட்டும் அன்றோ? அன்புக் கண்ணீர் ஊற்றெடுத்துப் பாயும் இரு கண்கள் தோன்றுகின்றன. வாய் ஏதோ கூறுவது போல, அசைந்துகொண்டேயிருக்கிறது. உற்றுக் கேட்க, அன்றவர், படைக்கலமாகக் கொண்ட ஐந்தெழுத்தின் ஒலியே எங்கும் ஒலிப்பது கேட்கின்றது. இத்தகைய உருவைக் காண்கின்றது. உவகை உறுகின்றது. ஆனந்தக் கூத்தாடுகின்றது. அன்பு நீர் சொட்டுகின்றது. வாயாரப் பாடுகின்றது. அவ்வோவியத்தினை ஈண்டுத் தருகின்றேன். நீங்களும் அது பெற்ற இன்பத்தைப் பெற்று மகிழுங்கள்.

"தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே."

—பெரிய. நாவரசர். 140.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

முப்பத்திரண்டாம் ஆண்டு நிறைவிழா

சைவர் மகா நாடு, வேலூர்

சேவிகாள் கேண்மின்களோ சிவன்எம்மிறை செம்பவள [களோ.
எரிபோல் மேனிப்பிரான் திறம்எப்போதும் சேவிகாள்கேண்மின்

பேரன்புடையீர்,

நிகழும் ஈசுவர௵ மார்கழி௴ கடுஉ (29-12-1937) புதன்கிழமை முதல் மூன்று நாட்களில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முப்பத்திரண்டாம் ஆண்டு நிறைவிழாவும், சைவர் மகா நாடும் இராய வேலூரில் இம்பீரியல் பாங்கிக்கு அடுத்துள்ள சங்கீத சபை மண்டபத்தில் திருக்கோவலூர் ஆதீனத்தலைவர் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் எனப் பெயர் வழங்கும் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமையிலும், சைவ இளைஞர் மகா நாடு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. அ. சிதம்பரநாத செட்டியார் எம். ஏ., அவர்கள் தலைமையிலும் அடியிற்காணும் முறைப்படி நடைபெறும். வட ஆறுகாடு ஜில்லாக் கூட்டுறவு நிலைய உதவிப் பதிவாளர் திரு. கீ. நாராயணசாமி முதலியாரவர்கள் மகா நாட்டைத் திறந்து வைப்பார்கள். திருநெல்வேலித் தமிழிசைவாணர்-உயர்திரு. சுந்தரஓதுவார்மூர்த்திகள் தமிழ்மறை ஓதுவார்கள்.

தாங்கள் தங்கள் சபையினரோடும், வாழ்க்கைத் துணை மக்கள் முதலிய உறவினரோடும், ஏனைய அன்பர்களோடும் வந்திருந்து நடத்திவைக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம்

V. S. பத்மநாப முதலியார், பி.ஏ., பி.எல்., வரவேற்புத் தலைவர்.
ராவ்பகதூர்-V. A. அருணசல முதலியார், வரவேற்பு உதவித்தலைவர்.
ராவ்பகதூர் V. முருகேச முதலியார்,
V. D. அருணசல முதலியார்,
புரிசை - முருகேச முதலியார்,
C. S. இராஜா பிள்ளை,
} வரவேற்புக் காரியதரிசிகள்.
ம. பாலசுப்பிரமணியன், சமாஜப் பொதுக் காரியதரிசி.

நிகழ்ச்சி முறை

ஈசுவர௵ மார்கழி௴ ௧௫௳ (29-12-1937) புதன்கிழமை

காலை 6 — 8 ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் வழிபாடு, சமாஜத்து இரண்டாம் பதிப்பு பெரிய புராணம் வெளியிடல்.

8 — 9 தலைவர் ஊர்வலம், வரவேற்பு.

9 —10 கடவுள் வணக்கம், திறப்புப் பேருரை, வரவேற்புத் தலைவருரை, சமாஜத்தின் 32-ம் ஆண்டு அறிக்கை படித்தல்.

10 —11 தலைவர் பேருரை.

மாலை 2 — 2-45 சிவஸ்ரீ குப்புசுவாமி குருக்கள், சிவாலய ஸ்தாநீகர், பூட்டுத்தாக்கு, "காரைக்காலம்மையார்"

2-45— 3-30 திரு. க. ப. சந்தோஷம், பி. ஏ., எல். டி. தலைமையாசிரியர், ஊர்ஹீஸ் காலேஜ் ஹைஸ்கூல், வேலூர் "அந்தம் ஆதி"

3-30— 4-15 ஸ்ரீ காஞ்சிபரவஸ்து இராஜகோபாலாசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம் "தமிழர் நாகரிகம்"

4-15— 5 திரு. ஸ்ரீநிவாஸகோபாலையங்கார், வழக்கறிஞர், திருவண்ணாமலை "சைவமும் விசிஷ்டாத் வைதமும்"

5 — 5-45 திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார், தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், "திருவாசகத்தைப்பற்றிய சில குறிப்புகள்"

5-45— 6-30 திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி. ஜில்லா கல்வி அதிகாரி, தென்னாற்காடு "முற்போக்கும் பிற்போக்கும்"

6-30— 8 தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

ஈசுவர௵ மார்கழி௴ ௧௬௳ (30-12-1937) வியாழக்கிழமை

காலை 6 — 9 சைவ இளைஞர் மகா நாடு - தலைமையுரை - திருவளர் செல்வர்கள் கா. கோவிந்தன், அ. சாமிநாதன், மா. கந்தசாமி, ச. சிவகுமாரன் முதலியோர் சிற்றுரைகள் - தீர்மானங்கள் - பிறகு சைவர் மகா நாடு தொடங்கும்.

9 — 9-45 திரு. வித்வான்-அருணை வடிவேல் முதலியார், தமிழாசிரியர், D. R. ஸ்கூல், காஞ்சிபுரம், "நாவுக்கரசர் நல்லுபதேசம்"

9-45—10-30 திரு. வித்வான்-ஔவை துரைசாமிப் பிள்ளை, தலைமைத் தமிழாசிரியர், போர்டு ஹை ஸ்கூல், திருவோத்தூர்,—"ஊனவெம்பந்தம் போக்க ஞானசம்பந்தம் காக்க"

10-30—11-15 திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ.,எம்.எல். தாகூர் சட்ட விரிவுரையாளர், திருநெல்வேலி "சிவசமவாத மறுப்பு"

மாலை 2 — 2-45 திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி. ஆசிரியர், பச்சையப்பர் ஹைஸ்கூல், காஞ்சிபுரம்,—"அன்றாட வாழ்க்கைக்கு மெய்கண்டார் செய்யுந் துணை"

2-45— 3-30 திரு. ராவ்சாஹெப் - B. G. இராஜகோபால முதலியார், மாஜி உபதலைவர், நகராண்மைக் கழகம், பெங்களூர் கண்டோன்மென்ட் "மனித வாழ்க்கை"

3-30— 4-30 திரு. எஸ். சோமசுந்தர பாரதியார், எம்.ஏ., பி.எல். தலைமைத் தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்—"தொல்காப்பியம் துலக்கும் தமிழர் நாகரிகம்"

4-30— 5-15 திரு. பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார், தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "ஞானத்தின் திருவுரு"

5-15— 6 திரு. தை. ஆ. கனகசபாபதி முதலியார், ஓவியக் கலைஞர், கலித்தொகை உரையாசிரியர், சென்னை "திருக்கோவையார்"

6 — 6-45 திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ஆசிரியர், "நவசக்தி", சென்னை "சந்தேகம்"

6-45— 8 தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

ஈசுவர ஹு மார்கழிமீ 16உ (31-12-1937) வெள்ளிக்கிழமை

காலை 6 — 9 சமாஜக் காரியக் கூட்டம், உத்தியோகஸ்தர் தேர்தல், தீர்மானங்கள்.

9 — 9-45 திரு. முத்துசாமி நாயனார், ஆசிரியர், போர்டு ஸ்கூல், கீழ்நாத்தூர், திருவண்ணாமலை "கண்ணப்பரன்பு"

9-45—10-30 திரு. K. கிருஷ்ணையர், பி.ஏ., போலீசு தமிழ்ச் சுருக்கெழுத்தாளர், வேலூர் "மெய்கண்டாரும் அப்பைய தீக்ஷிதரும்"

10-30—11-15 திரு. ராவ்சாஹேப் C. M. இராமச்சந்திர செட்டியார், பி. ஏ., பி. எல். வழக்கறிஞர், கோயன்புத்தூர்
"சைவ சமயம்பற்றிய புள்ளி விவரங்கள்"

மாலை 2 — 2-45 திரு. அ. சிதம்பரநாத செட்டியார், இளைஞர் மகா நாட்டுத் தலைவர்
"வாழாப்பத்தின் தத்துவம்"

2-45— 3-30 திரு. அடிசைக்கிழார் சிதம்பரனார், மாஜி போலீசு சர்க்கில் இன்ஸ்பெக்டர், கோயன் புத்தூர் "வாணரும் சைவமும்"

3-30— 4-15 திரு. ர. இராஜாமணியம்மையார், பி. ஏ. (ஆனர்ஸ்) தமிழாராய்ச்சி மாணவியார், பல்கலைக் கழகம், சென்னை
"சிலப்பதிகாரத்திற் காணப்படும் சமய நிலை"

4-15— 5 திரு. சீ. இராமலிங்க முதலியார் பி. ஏ., கமிஷனர், சைதாப்பேட்டை முனிசிபாலிடி "ஒரு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும்"

5 — 5-45 திரு. பெருஞ்சொற் கொண்டல் - புரிசை - முருகேச முதலியார்,
"பரஞ்சோதியார் பாடற்சுவை"

5-45— 6-30 நன்றி கூறல்.

6-30— 8 தலைவர் முடிபுரை, ஆசீர்வாதம், கடவுள் வாழ்த்து.

வாழ்க சீரடியாரெல்லாம்.

குறிப்புகள்:—1. அவைக்களத்தில் பெண்மணிகட்குத் தனியிடமுண்டு. 2. தகுந்த காரணங்கட்காக நிகழ்ச்சி முறையை மாற்றவும் குறித்த காலத்தைப் பெருக்கவும் சுருக்கவும் தலைவர் கட்டளையிடலாம். 3. ஒவ்வொரு சொற்பொழிவின் முதலிடை முடிவுகளில் தமிழ்மறை ஓதப்பெறும். 4. மூன்றாம் நாள் காலை 6 மணிமுதல் 9 மணிவரை நடைபெறும் கூட்டத்துக்கு வாக்குரிமையுடைய சமாஜ அங்கத்தினர் மட்டும் வரலாம். 5. சென்னையிலிருந்து வருவோர் காட்பாடி ஜங்ஷனிலும், தெற்கேயிருந்து வருவோர் வேலூர் கண்டோன்மெண்டு ஸ்டேஷனிலும் இறங்குதல் நலம். 6. ஷெ கண்டோன்மெண்டு ஸ்டேஷனிலிருந்து ஒரு பர்லாங்கு தொலைவிலிருக்கும் ஊர்ஹீஸ் காலேஜ் ஹிந்து மாணவர் ஹாஸ்டலில் மகாநாட்டுப் பிரதிநிதிகட்கு உறைவிடம் அமைக்கப்பட்டுளது. 7 மகாநாட்டில் சமாஜ வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும்.

Sadhu Press, Madras.

நாடு எவினுல் அடுத்த ஆண்டில் ஒவ்வொரு தேர்விற்கும் குறைந்தது நூறு மாணவர்களாவது விண்ணப்பித்து விடையெழுதுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

2. இச்சமாஜத்தின் கார்த்திகை மாதக் கூட்டம் நான்காம் சோமவாரமாகிய 13-12-1937ல் மாலை 6 மணிக்குமேல் கோவூரில் ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி தேவஸ்தானத்துத் தேவார பாடசாலையில் நடைபெறும். பல அறிஞர்கள் பேசுவார்கள். அன்பர்கள் அனைவரும் வருக.

3. இச்சமாஜத்தின் மார்கழி மாதக் கூட்டம், சமாஜ ஆண்டு விழாவாக வேலூரில் 29, 30, 31-12-37 ஆகிய மூன்று நாட்களில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தலைமையில் நடைபெறும். அவ்விழாவின் நிகழ்ச்சி முறை இவ்விதழின் இறுதியில் தனித்தாளாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

சந்தா அறிக்கை

நமது சமாஜத்தின் 1938 ஆம் வருஷத்திய சந்தாவை 31-12-1937க்குள் அனுப்பிவைக்க வேண்டுகிறோம். அவ்வாறு அனுப்பாத அன்பர்கட்கு 1938 ஆம் வருஷ ஜனவரி இதழ் வி. பி. மூலம் அனுப்பப்படும். வி. பி. மூலம் பெறுவதால் வி. பி. ரிஜிஸ்தர் செலவு அணா மூன்று வீணாகச் செலுத்த வேண்டியதாகும். பத்திரிகையை அடுத்த ஆண்டுக்குத் தருவிக்க விரும்பாதவர்கள் கருணைகூர்ந்து முன்னதாகவே தெரிவித்தால் பெரும் புண்ணியம் பெறுவார்கள். வாளாவிருந்து வி பி வரும் போது மறுப்பது சமாஜத்துக்கு நட்டம்விளைவிப்பதாகும். அடுத்த ஆண்டில் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் வெளியிட்டுப் பலவழிகளிலும்பத்திரிகையை உயர்விக்க வேண்டுமென்று சமாஜ நிர்வாக சபை தீர்மானித்துள்ளது. ஆண்டு விழாவிலும் இவ்விஷயம் ஆலோசிக்கப்படும். தங்கள் சந்தாவை நாளையே ம. பாலசுப்பிரமணிய முதலியார், காரியதரிசி, சைவ சித்தாந்த மகா சமாஜம், 22எ., கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், மதராஸ் என்ற விலாசத்துக்கு மணியார்டர் செய்க. தங்கள் சந்தா எண்ணையும் தற்போதைய திருத்தமான தபால் விலாசத்தையும் தயை கூர்ந்து தெளிவாக மணியார்டர் அச்சுத்தாளின் கடைப் பாகத்திற் குறித்தனுப்புக.

இங்ஙனம் :

சைவ சித்தாந்த மகா சமாஜம்
10—12—1937

ம. பாலசுப்பிரமணியன்,
காரியதரிசி.

சைவ சித்தாந்தசபை, தூத்துக்குடி

இச்சபையின் 54-ம் ஆண்டு நிறைவு விழா 25, 26—12—'37 சனி, ஞாயிறுகளில் வித்வான் புரிசை முருகேச முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெறும். பல பேரறிஞர்கள் விரிவுரைகள் நிகழ்த்துவார்கள் (என்று காரியதரிசி தெரிவிக்கிறார்.)

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 10. No. 1

திருவாவடுதுறை ஆதீனத் தலைவர்

மேற்படி சபையின் பொதுக் கூட்டமொன்று 21-11-'37-ல் கூடி, திருவாவடுதுறை 19 வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர் பரிபூரணமடைந்தமை குறித்து அநுதாபத் தீர்மானத்தையும் 20 வது பட்டத்துக்கு வந்துள்ள ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகருக்கு வாழ்த்துத் தீர்மானத்தையும் நிறைவேற்றிற்று.

திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி

மூலமும் உரையும் நூறு பிரதிகள் ரிஜிஸ்தர் தபாற்கூலியுள்பட விலை ரூபா இரண்டு (சிலோனுக்கு ரூ 2 சதம் 25.) நூறு பிரதிகட்குக் குறைவாக வெளியூர்கட்கு அனுப்ப இயலாது. பல நூறு பிரதிகள் வேண்டுவோர் உடனே ரிப்ளை கார்டு மூலம் விண்ணப்பிக்கவும். மணியார்டர் கிடைத்த பிறகே பிரதிகள் அனுப்பப்படும். வி. பி. ஆர்டர்கள் கவனிக்கப் படமாட்டா.

பவானந்தர் கழகப் பிரசுரங்கள்

குறைந்த விலைக்கு விற்கப்படும்

		கேட்லாக் விலை		குறைந்த விலை	
		ரூ.	அ.	ரூ.	அ.
1.	தொல்காப்பியம் பொருளதிகாரம்: நச்சினார்க்கினியர் பேராசிரியர் உரையுடன் கூடியது. (4 - பாகங்கள்) செட் ஒன்றுக்கு ...	20	0	6	0
	மேற்படி முதல், இரண்டு பாகங்கள் பாகம் ஒன்றுக்கு விலை ...	5	0	2	0
	மேற்படி மூன்று நான்கு பாகங்கள் இரண்டும்	10	0	2	0
2.	யாப்பருங்கலவிருத்தி: பழைய ஏடுகளைப் பார்த்துப் பரிசோதித்துப் பதிப்பித்தது. (2 பாகங்கள்) செட் ஒன்றுக்கு...	10	0	3	8
3.	போகத்தியத்திரட்டு: ...	1	12	0	6
4.	தமிழ் இலக்கணத் தெளிவு: பி. ஏ., பட்டம்பெற்ற தாவீது யோசேப்பு உபாத்தியாயரால் இயற்றப்பெற்றது.)	7	0	0	8

கிடைக்குமிடம் :—பவானந்தர் கழகம்,
நெ. 13, சர்ச்சு ரோட், வேப்பேரி, சென்னை.

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Edited and Published by A. Somasundaram Chettiar, M. A., for the Saiva Siddhanta Maha-Samajam, at "Thiruvarulagam", 22-A. Kallukaran Street, Mylapore, Madras.